89

விநோதினி

வேப்பேரி, சென்னை.

அனுபந்தம் 1927.

Price As. 8.

பிளாக்குகள்.

பத்திரிகைகளுக்கு
புத்தகங்களுக்கு
விளம்பரங்களுக்கு
லேபில்களுக்கு

வேண்டிய ஆப்டோன், லயன் பிளாக்குகள்
நீண்டகால அனுபோகஸ்தர்களால் உயர்ந்த
வேலைப்பாடுடன் தயாரிக்கப்படுவது.

அபிப்பிராயம்

R. M. K வேலுசாமி பிள்ளை, டாக்டர்

பழனி,
28—8—27

தங்கள் பிளாக்கு மிக அருமையாகவும், நல்ல வேலைப்பாடுடனும், போட்டோவில் உள்ளபடி தவறாமல், உள்ளது உள்ளபடி செய்தனுப்பிய வேலைத்திறமைக்கு மெச்சுகிறேன்...... தங்களுக்கு இன்று நான் 20 படம் அனுப்பியிருக்கிறேன் நீங்கள் 120 பிளாக்கு செம்பில் செய்து ரூ 360—க்கு V. P. செய்யவும்.

சார்ஜு விபரம்:—

ஆப்டோன் பிளாக்

செம்பில்	சதுர அங்குலம்	அணா	8
துத்தநாகத்தில்	,,	,,	6

லயன்பிளாக்

செம்பில்	சதுர அங்குலம்	அணா	10
துத்தநாகத்தில்	,,	,,	4

குறிப்பு:—

8 சதுர அங்குலத்திற்கு உட்பட்ட பிளாக்குகளுக்கு 8 சதுர அங்குல சார்ஜே செய்யப்படும்.

விலாசம்:—

சர்மா சகோதரர்

பிளாக் செக்ஷன், வேப்பேரி, சென்னை.

'வினோதினி'

வேப்பேரி, சென்னை.

1927 வருஷ அனுபந்தம்

EDITORIAL STAFF

MANAGING GENERAL EDITOR
Mr. K. K. SHARMA

HONORARY EDITOR
Mr. T. N. NATARAJAN

OFFICE OF THE REGISTRAR OF ...
19 JAN 1928
MADRAS

HONY. SECTIONAL EDITORS

LADIES' PAGE
ŚRIMATHI SUMATHI DEVI B.A., L.T.,

STORY PAGE
Mr. T. N. SIVANANDAM

SCOUT COLUMN
Mr. P. S. NARAYANASWAMY B.A., L.T.,

COMIC CUTS
Mr. K. DURAIRAJ

ART DIRECTOR
PROF. K. K. SARMA

விசேஷ அறிக்கை.

சென்னைக்காகிதம்

இவ்வனுபந்தத்திலுள்ள கிளேஸ் காகிதம் தவிர மற்ற கெட்டிக் காகிதம் யாவும் சென்னையில், நம் சகோதரிகள் சிலரால் கையினால் செய்யப் பட்டதாகும். இவ்வளவு அருமையான குடிசைத் தொழில் பல ஆதரவின்றி அழிந்து வருவது நமது குற்றமேயன்றோ? குற்றமறிந்து அதை நீக்குவது என்றோ?

19
050

நமது வந்தனம்

இவ்வாண்டு அனுபந்தம் வெளியிட பல முக்கிய பிளாக்குகளை தாராளமாய் கொடுத்து உதவிய 'தமிழ் நாடு' ஆசிரியருக்கு நமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

விஷய அட்டவணை.

			பக்கம்.
1.	பாரதமாதா —	முகப்புப் படம் —	5
2.	'விடுதலை' பாட்டு —	ஸ்ரீ பாரதி —	7
3.	நட்பு —	—	8
4.	'விநோதினி' வாழ்த்து —	(படம்) —	9
5.	நாட்டினம் சுற்றினால் —	(படம்) —	10
6.	1927 —	—	11
7.	42-வது அகில இந்தியதேசீய மகாநாடு —	(படங்கள்) —	15
8.	எழுமின் —	(பிரேமா) —	25
9.	மைனரின் லீலைகள் —	(படங்கள்) —	27
10	வேசியின் வலை —	—	33
11.	குடியின் கேடு —	(படங்கள்) —	37
12.	எது சரி—சிறு நாடகம்	(S. T. R. Chary.) —	39
13.	குதிரைப் பந்தயச் சூது —	(படங்கள்) —	43
14.	ஸ்ரீ கோமதி கண்ணம்மாவின் பிரசங்கம் —	(படத்துடன்) —	45
15.	பிச்சைக்காரர் பிழைப்பு —	(படங்கள்) —	49
16.	வெளுத்ததெல்லாம் பாலல்ல—சிறு கதை (கல்யாணம்)	—	50
17.	பொழுது போக்கு —	(படங்கள்) —	53
18.	ஜீவஹிம்சையும் மரக்கறிகளும் —	—	55
19.	விஸ்கிராஜனின் விளையாட்டுகள்	(டங்கள்) —	59
20.	சிங்கமும் தேனீயும்—விளையாட்டுக் கதை —	—	61
21.	என்? எப்படி? —	—	6
22.	நீதிஸ்தல வீரயம் —	(படங்கள்) —	73
23.	டபார்கானும் படார் சாமியும் குட்டிக்கதைகள்	(படங்கள்) —	77
24.	கிளிக்குப் படிப்பு —	(படங்களுடன்) —	85
25.	உலக விநோதம் —	(படங்கள்) —	93



விளம்பர அட்டவணை.

		பக்கம்.
பிளாக்குகள்	சர்மா சகோதரர் ராப்பர்	
தைல வகைகள்	Do	16
குஷ்டரோக மருந்து	R. M. K. வேலுசாமி பிள்ளை	24
ஜிண்டான்	S. வைத்தியா அன் கோ,	31
எம்பிராய்டரி சாமான்கள்	W. S. கோவிந்தசாமி	31
சக்தி சஞ்சீவினி மாத்திரை	ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்	32
Rose Water	P. S. S. Ratnam	34
டிடக்டாஸ்	பாரிஸ் எம்போரியம்	35
பாக்கெட் கெடியாரம்	Canaidan Watch Pcople ,	35
ஜெர்மன் எலெக்டிரிக் விளக்கு	The Fancy Watch house	35
கைக்கெடியாரம்	Do	35
Do	ஹார்டி அன் கோ	36
இன்ப இரகசியப் புத்தகங்கள்	C. G. சங்கர் அன் கோ	36
போட்டோ ஆல்பம்	பிரிமியர் நாவல்டி ஸ்டோர்ஸ்	36
ரோம சம்ஹாரி சோப்	Do	36
சித்திர வேலைகள்	சர்மா சகோதரர்	44
சரீர மர்ம சாஸ்திரம்	மாணிக்க விலாசம் பிரஸ்	47
இல்வாழ்கையின் இரகசியம்	வாசன் புஸ்தக சாலை	48
சங்கீத புத்தகங்கள்	M. S ராமுலு கம்பெனி	52
பட்டணம் பொடி	ஷண்முகம் கம்பெனி	56
டைம்பீஸ் கெடியாரங்கள்	சுவான் ஹவுஸ்	57
மருந்து வகைகள்	டாக்டர் V. R. சுந்தரம்	58
காசிப் பட்டுகள்	பாலாஜி அன் கோ	64
பட்டுக் குட்டைகள்	ராமய்யர் அன் கோ	64
குமார கவசம்	குமார பீடம்	65
மின்சார ரசம்	மின்சார ரசம் கம்பெனி	71
Enlargements	Sarma Bros	72
சிவாஜி (புத்தகம்)	சென்சரி டிரேடிங் கம்பெனி	76
பூஜைக்குகந்த போட்டோ படங்கள்	சர்மா சகோதரர்	90
நாஷனல் ஸாவனீர் படம்	S. N. ராஜன் அன்கோ	91
ஸ்ரீ சாரதா ரக்ஷை	Do	32
பட்டாடைகள்	Do	76

By Curtesy of S. N. RAJAN & Co., Shiyali.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!!

ஏழையென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை; ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப
திந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்வ மெய்தி
மனமகிழ்ந்து கூடியே,
மனிதர் யாருமொரு நிகர்
ஸமானமாக வாழ்வமே. (வி)

மாதர் தம்மை யிழிவு செய்யு மடமை
யைக் கொளுத்துவோம்
வையவாழ்வு தன்னிலெந்த
வகையினும் நமக்குளே;
தாதரென்ற நிலைமைமாறி
யாண்களோடு பெண்களும்
சரி, நிகர், ஸமானமாக வாழ்வமிந்த
நாட்டிலே. (வி)

பறையருக்கு மிங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு
மறவருக்கும் விடுதலை!
திறமைகொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்!
தேர்ந்தகல்வி, ஞானமெய்தி
வாழ்மிந்த நாட்டிலே (வி)

பாரதி

நட்பு.

உண்மை நட்பு தேகாரோக்யம் போன்றதாகும். அதன் அருமை அது இழக்கப்பட்ட பின்னரே விளங்கும்.

C. C. Coltovn

ஃ ஃ ஃ

உன் முற்போக்கின்பொழுது உன்னிடமுண்டான குற்றங்களை முகத்துக்கு முகமாக எடுத்துக் கூறுபவனே உன்னுடைய ஆத்ம நண்பனென அறி. அவனே உற்றபொழுது உனக்கு உதவி செய்ய முன் நிற்கும் உத்தமனவன்.

Horace Smith

ஃ ஐ ஃ

நண்பனை பொறுக்கி யெடுப்பதில் சற்றும் அவசரப் கொள்ளாதே. நட்பை விலக்குவதின் முன் தீவ்ரமாய் யோசித்து மெதுவாய் முடிவுக்கு வா.

Benjamin Franklin

ஃ ஃ ஃ

யார் நண்பன்? எவனிடம் என் மனதிலுள்ளதை வெளியிட்டால், பெட்டியில் வைத்துப் பூட்டியது போல் பத்திரமாய் இருக்குமோ, அவனே உண்மை நண்பன்.

Emerson

ஃ ஃ ஃ

தாராளச் சிந்தையுள்ளவர்களாலேயே உண்மையான நண்பர்களாய் இருக்க முடியும். குறுகிய நோக்கமும், பேடித்தன்மையும், உள்ளவர்களால் நட்பின் தத்துவம் இன்னதென்றே அறிந்துக் கொள்ள முடியாது.

Charles kingsley

ஃ ஃ ஃ

நண்பனிடம் நம் சந்தோஷத்தை வெளியிடுவதால் நாம் இன்னும் அதிக சந்தோஷமடைகிறோம். அதேபோல் அவனிடம் நம் துக்கத்தை வெளியிடுவதால், துக்கம் அதிகரிப்பதில்லை ஆனால் குறைகிறது. எனவே சிறந்த நண்பன் சஞ்சீவி போல்வன்.

Lo rdBacon

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 JAN 1928
MADRAS

வாழி மறை நான்கும் வாழி வளரறங்கள்
வாழி தமிழாம் மடமயிலும்—வாழியரோ
புன்முறுவ லோடிலகு பூவை "விநோதினி"யும்
இன்னிலத்தி லென்று மினிது.

L. ஸ்ரீனிவாச அய்யர்,
கும்பகோணம் காலேஜ் தமிழ் பண்டிதர்.

ராட்டினம் சுற்றினால்

சோம்பேறித்தனம் ஒழியும்
வீண் சண்டை ஒழியும்
கிழடுகளின் ரட்சகன்
மான்செஸ்டர் கொடுமை தொலையும்
தமிழ் நாடு
பெண்களுக்கு விடுதலை
SARMA BROS

1927.

1927 ம் வருஷம் முடிவு அடைந்தது. 1928 ம் ஆண்டு பிறந்திருக்கிறது. இந்திய தேச சரித்திரத்தில் சென்ற ஆண்டில் சில முக்கிய விஷயங்கள் குறிக்கத்தக்கவை. (1)நமது பிரதிநிதிகள் சட்டசபைகளில் செய்த வேலை (2)மாகாணங்களில் இரட்டையாட்சி முறை (3)இந்து முஸ்லீம் விசாரம் (4)வங்காளச் சிறையாளர்கள் (5)ஆப்கானிய மன்னரின் விஜயம் (6)ராயல் கமிஷன்

சட்டசபை வேலை

சட்டசபை நடவடிக்கைகளிலிருந்து நமது பிரதிநிதிகள் எவ்வளவு பொறுப்புடன் வேலை செய்து வந்திருக்கிறார்களென்றும், அவர்களது பேச்சுவன்மையினால் ஜனங்களுக்கு எவ்வித நன்மைகள் கிடைத்தன என்றும் அவர்களது பேச்சை கவர்ன்மெண்டார் எவ்வளவு தூரம் மதிக்கிறார்களென்றும் தெரிந்து கொள்ளலாம். முக்கியமாக கவர்ன்மெண்டார் வருஷாந்திர வரவு செலவு திட்டம் தயாரித்து அதன் பேரில் சட்டசபையில் நடந்த விவாதத்தில் ராணுவச் செலவு திட்டத்தை நிறைவேறாமல் செய்தார்கள். ரயில்வே போர்டில் இந்திய பிரதிநிதி இல்லையென்றும் ரயில்வே உத்தியோகங்கள் இந்தியர்களுக்கு அதிகமாக கொடுக்கப்படவில்லை என்றும் ரயில்வே திட்டத்தை தூக்கி எறிந்தார்கள். ராஜப் பிரதிநிதியின் சபைச் செலவுக்கும் பணம் கொடுக்க மறுத்தார்கள். ஆனால் இவ்வளவு எதிர்ப்புக்கும் தப்பி ராஜப் பிரதிநிதி தனது சொந்த அதிகாரத்தில் எல்லா செலவுகளுக்கும் ஆதரவு அளித்ததால் ராணுவமும் நடந்து வருகிறது, ரயிலும் ஓடு[illegible]து, ராஜப் பிரதிநிதி சபையும் நடக்காமலிருந்ததாகத் தெரியவில்லை.

மாகாணங்களில் இரட்டையாட்சி முறை

இரட்டையாட்சியையே உடைத்தெறிந்துவிட்டு கவர்ன்மெண்டு நடக்கவொட்டாமல் முட்டுக் கட்டை போடப் போவதாக ஒவ்வொரு மாகாணங்களிலும் வருஷ ஆரம்பத்தில் ஸ்வராஜ்ய கக்ஷியினர் சொல்லி அதிகமான தொகையினராக சட்டசபையில் நுழைந்தனர். வங்காள மாகாணத்திலும், சிறிது காலம் தவிர, மற்றெந்த மாகாணத்திலும் எப்பொழுதும் இரட்டையாட்சி உடைபடக் காணோம்; மந்திரி ஆட்சி முறை கவலையில்லாமலே நடந்து வந்திருக்கிறது. முட்டுக் கட்டையை கையில் கொண்டு போனவர்களில் அநேகர் சட்டசபைகளுக்கு புதிதாகையால் சட்டசபைகளையும், நாற்காலிகளையும், பங்காக்களையும், இருக்கிற சுகத்தையும் கண்டதும் முட்டுக் கட்டையை தூர எறிந்துவிட்டு சுகவாசிகளாக காலம் கழிக்கின்றனர். ஆகவே இரட்டையாட்சியும் முறிவுபடவில்லை. முட்டுக் கட்டைப்பேச்சு ஒடுங்கிற்று. மந்திரிமார்களாவது சிறிது கவனித்து சுதேசிக் கைத்தொழில்களை விருத்தி செய்வதிலும், கல்வியை இலவசமாக்குவதிலும் குடியை ஒழிப்பதிலும் முயற்சி எடுத்துக் கொள்ளவுமில்லை.

இந்து முஸ்லீம் விசாரம்

சென்ற வருஷ ஆரம்பத்தில் இந்தியாவின் உயிருக்கே ஆபத்தாக இருந்தது இந்த

சண்டைதான். ஒற்றுமையை காப்பதேகூடாமலிருந்தது. வட இந்தியா எங்கும் கலகம். வெட்டு குத்து சண்டைகள். ஒவ்வொரு நாளும் அந்த ஊரில் இவ்வளவு இந்துக்கள் குத்தப் பட்டனர். இந்த ஊரில் மகம்மதியர் தாக்கப் பட்டனர் என்று இப்படியே நாள் தவராமல் அல்லோல கல்லோலமாயிருந்தது. மசூதிமுன் மேளம் வாசித்தல், பசுவதை இவை இரண்டும்தான் எல்லா கலகத்திற்கும் முக்கிய காரணமாயிருந்தது. சுவாமி சிரத்தானந்தர் சுட்டுக் கொல்லப் பட்டார். நல்ல காலமாக நாள் ஆக ஆக கலகம் குறைந்து கொண்டே வந்தது. லார்ட் பர்கென்ஹெட் ராயல் கமிஷன் நியமன விஷயத்தில் இந்துவானாலும் சரி, முஸ்லீம் ஆனாலும் சரி என்று ஒரே நாமமாக சாற்றிவிடவே கலகம் குறைந்தது, ஒற்றுமை காணலாயிற்று. சென்னை காங்கிரஸ் ஒற்றுமைத் தீர்மானமும், கல்கத்தா முஸ்லீம் லீக்கில் கமிஷன் பகிஷ்கார தீர்மானமும் நிறைவேறி ஒற்றுமைக்கு வழி காட்டிற்று. தனிப்பட்ட நண்பர்கள் சச்சரவு செய்து கொண்டேயிருந்தாலும் தலைவர்கள் ஒற்றுமை நாடியிருக்கும் வரையில் க்ஷேமம்.

வங்காளச் சிறையாளர்கள்

யாதொரு விசாரணையுமில்லாமலும் எப்பொழுதாவது விசாரிக்கப் போகிறார்களா என்ற நம்பிக்கையும் அற்றவர்களாய் வங்காளச் சிறுவர்கள் பலர் சிறையில் உழலுகின்றனர். சட்டசபைகளில் இவர்களை விடுவிக்க வேண்டும் என்று திர்மானத்தின் பின் தீர்மானம் வந்து ஏகமனதாக நிறைவேறினாலும் கூக்குரலை கேட்பாரில்லை. நற்காலமாக ஸ்ரீஜுத் சுபாஷ் சந்திரவசுவை மாக்ஷிமை தங்கிய பிரிட்டிஷார் சிறையினின்றும் விடுவித்து ஒரு பெரிய நன்மையைச் செய்தனர். இவர்களுக்கு இனிமேலாவது விமோசனம் கிடைக்குமென எதிர் பார்க்கலாமா?

ஆப்கானிய மன்னரின் விஜயம்

1927ம் வருஷத்தில் நடந்த இந்த சம்பவம் தேச சரித்திரத்தில் முக்கிய குறிப்பாகும். ஏனென்றால் இதற்கு முன் இரண்டு தலைமுறைகளாக இந்தியாவிலிருப்பவர்களுக்கு ஆப்கானியர்கள் என்றால் அச்சம் அவர்கள் இந்தியாவை கைப்பற்றி நாசம் செய்துவிடுவர்களென்றும், அதைத் தடுப்பதற்கே ஏராளமான பொருட் செலவில் வட மேற்கு பிரதேசத்தில் ராணுவப் படை வைத்திருக்கிறதென்றும் ஆப்கானியர்கள் மிகவும் துஷ்டர்களென்றும் ரத்தவெறிகொண்டவர்களென்றும், நமக்கெல்லாம் பாடம் படிப்பிக்கப் பட்டிருந்தது. ஆனால் ஆப்கானிய மன்னர், மாக்ஷிமை தங்கிய அமானுல்லா கானும் அவரது பத்தினியாரும் நம் நாட்டில் பிரவேசித்து நம்மிடையே இரண்டு தினம் தங்கியிருந்ததிலும், அம்மன்னர் நிகழ்த்திய சொற்பொழிவுகளிலும் இந்த எண்ணமெல்லாம் ஒழிந்தது. அம்மன்னர் ஓர்பொதுக் கூட்டத்தில் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்திக்கு தம்மருகில் ஆசனம் அளித்து உட்காரச் செய்து மரியாதை செய்ததை உலகம் போற்றுகிறது. இந்தியர்களுக்கும் ஆப்கானியர்களுக்கும் யாதொரு பகையும் கிடையாதென்றும் இருதேசத்தாரும் ஒற்றுமையாக வாழலாம் என்பதையும் இது விளக்கி விட்டது.

ராயல் கமிஷன் நியமனம்

இந்நியமனம்தான் தேச சரித்திரத்தில் ஒரு பெரும் கிளர்ச்சிக்குக் காரணமாகும். இதனால் பற்பல கொள்கைகளுடன் சிதறிக்கிடந்த பல்வேறு கக்ஷியினர்களாகிய

'காங்கிரஸ் வாதிகள், சுயராஜ்ய கக்ஷியினர் மிதவாதிகள், ஒத்துழைப்பாளர், இந்துமகா சபையார், முஸ்லீம் லீக்கினர் முதலிய எல்லோரும் இக்கமிஷனை முற்றிலும் பகிஷ்காரம் செய்ய வேண்டும் என்று ஒற்றுமையாக வேலை செய்யத் தொடங்கி விட்டனர். லார்ட் பர்கன்ஹெட்தான் இந்த அரிய ஒற்றுமைக்குக் காரணம். ஆங்கில ராஜ தந்திரிகள் மகாயுத்தம் நடந்த பொழுது இந்தியப் பணமும், இந்தியமக்களும் அவசியம் வேண்டியிருந்த பொழுது அநேக வாக்குறுதிகள் கொடுத்து தம் காரியத்தை நிறை வேற்றி விட்டு இப்பொழுது எல்லாவற்றையும் மறந்து "இந்தியர்களுக்கு வேண்டியவைகள் இந்தியர்களுக்குத் தெரியாது; அவையெல்லாம் வெள்ளைக்காரர் களுக்குத் தான் தெரியும்" என்றது ஓர் துக்ககரமான சம்பவமாகும்.

சென்னை காங்கிரஸ்

பல விதத்திலும் வருஷ முடிவில் சென்னையில் நடந்த தேசிய காங்கிரஸ் சிறப்பாகும். இந்து முஸ்லீம் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று. பூர்ண சுதந்திரம் என்று ஓர் தீர்மானம் புறப்பட்டது. ராயல் சமிஷன் பகிஷ்கார தீர்மானம் அழகாக நிறைவேறிற்று. நம் நாட்டிலும் கூட ஒற்றுமைக் குறிகள் காணலாயிற்று.

முடிவாக 1927-ம் வருஷம் தேச சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க வருஷமென்றே சொல்ல வேண்டும். அடுத்த வருஷத்தில் நாட்டில் ஒற்றுமை ஏற்பட்டு பற்பல கக்ஷி பிளவுகளும் ஒழிந்துமக்கள் ஒற்றுமையாய் வாழ ஈசன் அருள்புரிவாராக.

IMPREGNOL SYLLIT.

A wood preservatives produced in Sweden after many years of experience and testing by Stockholms Superfosfat.

Fabricks A. B., Stockholm, (Sweden)

Sole Agents:—for India

S. VAIDYA & Co;

105, Devaraja Mudali Street., P.T. & Trichy Fort.

'விநோதினி'

அழகிய 1827-ம் வருஷத்து

பைண்டு வால்யூம்

193 சித்திரங்கள்

612 பக்கங்கள்

அரியபல விஷயங்கள் கொண்டது

விலை ரூ. 2—8—0

'விநோதினி'

வேப்பேரி, சென்னை.

வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்!! முப்புவைக் கண்டுபிடித்தவர்!!

1860௵ 21-: ஆக்டுப்படி கவர்ன்மெண்டாரால் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட மதுரை சித்தவைத்திய சங்கம் பிரசிடெண்டாகிய பழனி, R.M.K. வேலுசாமி பிள்ளையவர்களின் மருந்துகள் தான் உண்மயான மருந்துகள்.

ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை அவர்களின்

தாம்பிர பஸ்பத்தால்

திமிர் குஷ்டம் தீர்ந்து, மதமதப்பு மாறி, சுரணையுண்டாகி, ஆறுதரணம், குழிப்புண்களெல்லாம் ஆறி, வட்ட வட்டமாயுள்ள செம்மேகத் தடிப்புகளெல்லாம் மறைந்து, கிரந்தி, மேக பத்துக்களெல்லாம் உதிர்ந்து, குழகுழகவென்று அழுகிபோன குஷ்ட ரோகங்களெல்லாம் சோஸ்தமாகி விட்டதற்கு அடையாளமான போட்டோபடம்.

வைத்தியத்திற்கு முன்

இன்னும் காசம், க்ஷயம் ஈளை, இருமல், குன்மம் வெள்ளை, வெட்டை கடுப்பு, எரிச்சல், சூலை, கிரந்தி, கண்டமாலை, கைகால் குடைச்சல், மேக நீர் முதலிய சகலவித கர்மவியாதிகளையும் கண்டிப்பாய்த் தீர்க்கும். ஸ்திரீகளுக்குண்டாகும் சூதக பந்தம், வயிற்றுவலியை ஆச்சரியப்படும்படி நிருத்தும். அநுபவத்தில் கைகண்ட அருமையான மருந்து.

100 வேளை தாம்பிரபற்பம் அனுபானத்துடன் விலை ,, ரூபா 50.

50 வேளை மருந்து ரூபா 25.

ஏழைகளுக்கு பாதி விலை.

வைத்தியத்திற்குப் பின்

வைத்திய ஆசிரியர்,

R. M. K. வேலுசாமி பிள்ளை

சித்த வைத்தியசாலை, பழனி. [Palni.] தந்தி விலாஸம் :—"சித்தர்" பழனி.

Tel. Address "Siddhar" Palni

நமது பிராஞ்சு வைத்தியசாலை:—

ஏஜெண்ட் :—என். தண்டபாணி கம்பெனி, 6-99, பவழக்காரத் தெரு, சென்னை

42 வது

அகில இந்திய தேசிய மகாநாடு

சென்னை

1927



கைத் தொழில் இரகசியங்கள்.

பலவித தொழில்கள் அனுபவ முறைகள் இரகசியக்குறிப்புகள் தொழில் நடத்தும்வழிகள்.

முதலிய பலவும்

"விநோதினியில்"

பிரதி மாதமும் வெளிவரும்.

அயல் நாடுகளிலுள்ள பல பெரிய தொழிற்சாலைகளைப் பற்றிய விவரங்கள் படங்களுடன் வெளியிடப்படும்.

இந்த வருஷச் சந்தாவைச் செலுத்தத் தவறாதீர்கள்.

வருஷ சந்தா—

உள் நாடு ரூ. 2

வெளி நாடு ரூ. 2 8 0

விநோதினி

வேப்பேரி, சென்னை.

பொன் ஒத்த பொருள்கள்.

யாவும் சாஸ்திர முறைப்படி

தயாரிக்கப்பட்டவை.

சந்தனாதி தைலம். அரைக்கீரை விதைத் தைலம். கீழா நெல்லித் தைலம்

சகல விதமான சிர நோய்களையும் கண்டித்து கண்களைக் குளிரச் செய்து மூளைக்கு வலிவு கொடுப்பதில் நிகரற்றவை.

ரூ 1 சேர்டின் ஒன்று 1--4-0-

½ ,, ,, ,, 0--12--0

சர்மா சகோதரர்,

Sales Department

VEPERY, MADRAS.

டாக்டர் அன்சாரி
(காங்கிரஸ் தலைவர்)

ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார்
(சென்ற ஆண்டுத்தலைவர்)

ஸ்ரீ முத்துரங்க முதலியார்
(வரவேற்பு கமிட்டித் தலைவர்)





காங்கிரஸ் நகரம்

காங்கிரஸ் பந்தலின் பிரதான வாசலும் தேசியக் கொடிஸ்தம்பமும்.

பிரதானவாசல் இரவில் விளக்குகளின் காட்சி

(தேசியக் கொடிச்சின்னமாக துவஜஸ்தம்பத்தில் இரவில் மூன்று வர்ணங்களில் விளக்குகள் வைக்கப் படுகின்றன.)



காங்கிரஸ் தெற்கு வாசல்



தெற்கு வாசல் இராத்திரித் தோற்றம்.



காங்கிரஸ் தபால் தந்தி ஆபீஸ்,

காங்கிரஸ் ரயில்வே ஸ்டேஷன்.
(பிரத்தியேகமாய் ஸ்தாபிக்கப் பட்டது.)

காங்கிரஸ் நகரத் தெருக்களில் ஒன்று



காங்கிரஸ் சமயலறைகள்.



காங்கிரஸ் நகரில் கக்கூஸ் ஏற்பாடுகள்



காங்கிரஸ் பந்தலுக்குத் தலைவர்கள் வருகை

ஸ்திரீ தொண்டர் படை



அகில இந்திய பொருட்காட்சி சாலை



பொருட்காட்சி சாலைக்குள் மிகுந்த வேலைப்பாடுடன் கட்டப்பட்டுள்ள பந்தல்.

அகில இந்திய பொருட்காட்சி சாலையின் பிரதான வாசல்

ஆகாயத்தில் கம்பி மூலம் செல்லும் வண்டி புறப்படும் ஸ்தலம்



ஆகாயத்தில் கம்பிமூலம் வண்டிகள் செல்லுதல்.



அகில இந்திய கதர் சண் காக்ஷி சாலை.

குறிப்பு:— இந்தப் படங்கள் யாவும் வேப்பேரி, சர்மா சகோதரர்களால் எடுக்கப்பட்டவை. காங்கிரஸ் சம்பந்தமான ஆறு போட்டோக்கள் யாவும் அடங்கிய அழகிய போட்டோ ஆல்பம் அவர்களிடம் கிடைக்கும். அதன் விலை ரூ 3. சர்மா சகோதரர், வேப்பேரி சென்னை என்ற விலாசத்திற்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

Neat and Accurate Dispensing done at

"The Pingle Pharmacy"

Dispensing Chemists & Druggists,

High Road, Egmore, Madras.

Drugh · Pure! Charges Moderate!!
Attention Prompt!!!

All Patent Medicines Sold

MOFUSSIL ORDERS PROMPTLY EXECUTED.

முன் எச்சரிக்கை!

உங்களுக்கு இனி நேரப் போவதைப் பற்றி முன்னதாக அறிந்திருப்பது நல்ல தல்லவா?

அப்படியானால்

இரேகை சாஸ்திரம்

கற்றுக் கொள்ளுங்கள்.

பிற்கால நிகழ்ச்சியைப் பற்றிச் சரியாகக் கூறுவதில் சிறந்தது
இரேகை சாஸ்திரமே.

விநோதினிக்கு

புது ஆண்டு சந்தா செலுத்தி இவ்வுயரிய சாஸ்திரத்தைக் கற்றறிந்து கொள்ளுங்கள். ஏராளமான சித்திரங்களுடன் பிரதி இதழிலும் இரேகை சாஸ்திரத்தின் இரகசியங்கள் வெளியிடப் படுகிறது.

எழுமின்.

(பிரேமா)

'மனம்போல் மாங்கல்யம்'. மனம் எவ்வழி நினைக்கிறதோ அவ்வழியே நடக்கும் பொம்மை போன்றவன் மனிதன். சுயேச்சை வாழ்வோ, அடிமை நிலையோ அவன் எதை நினைக்கிறானோ அவ்வழி அவன் வாழ்க்கை நிலைத்து நிற்கிறது. ஆனால் சில சந்தர்ப்பங்கள் காரணமாக ஒருவன் தன் உண்மை மனோபாவத்திற்கு விரோதமாக நடந்து கொள்ளலாம். அவ்விதம் நடப்பது, நாடகத்தில் நடிப்பதை ஒத்ததாகும். உண்மையில் அவன் மனம் அவ்வாழ்க்கையில் ஈடுபடாதவரை, அவனது வாழ்வின் போக்கு மாறுதலடைந்தே தீரும். முகஸ்துதியின் காரணத்தாலோ, அல்லது கட்டாய நிர்பந்தத்தாலோ ஒருவன் ஓர் காரியம் செய்ய நேரலாம். ஆனால் மனச்சாக்ஷி இடம் கொடாதவரை அவனை அக்காரியத்தில் கட்டுப்பட்டவனாகக் கொள்வதற்கில்லை. எனவே ஒருவனின், ஒரு சமூகத்தின், ஓர் தேசத்தின் வாழ்வு நிலை வெளித்தோற்றத்தில் ஈடுபட்டலையாத உண்மை திடமனோ பாவத்தை பொருத்திருக்கிறது. திடமனமே உயர்வுக்குப் பிறப்பிடம்: திடமனமே கல்விக்கு இருப்பிடம்; திடமனமே நன்மையின் உறைவிடம்; ஒருவனது மனோபாவத்தை அவனுடைய நடத்தையைக் கொண்டுமட்டும் கண்டுகொள்ள முடியாது. அவனுடைய உண்மையான வாழ்க்கையின் தத்துவத்திலிருந்தே அவனது மனோபாவத்தைக் கண்டுகொள்ளவேண்டும். ஒருவனது வாழ்வின் போக்கே அவனது உண்மைக் குணத்தைக் காட்டுவதாகும்; இந்த குணவிசேஷமே மிருக வர்க்கத்திற்கும் மனித வர்க்கத்திற்கும் உண்டான வித்தியாசம். உலகத்தில் அழியாப் புகழ் நாட்டிய பெரியோர்கள் பலரும் உத்தம குண விசேஷங்கள் பெற்றவர்களாவர். மதம்—மதம் என்பதின் உண்மைக் கொள்கை மக்களிடை நன்னடத்தையையும் நற்குணத்தையும் வளர்ப்பதேயாகும். குணமும் நடத்தையும் உயரவாழ்க்கைநிலை உயரும்-வாழ்க்கை நிலை உயர மக்களின் சக்தி வலுக்கும்—மக்களின் சக்தி வலுக்க தேசம் முற்போக்கடையும். இதுவே நித்தியானந்தநிலை—இதுவே கடவுளின் ஆலயம்—இதுவே சுதந்திர தேவியின் இருப்பிடம்.

இந்த தத்துவத்தை மறந்துவிட்டால் பின் வழிபாடுகளும், ஸ்தோத்திரங்களும், மந்திரங்களும், யாதும் பலனளிக்கக் கூடியனவையல்ல. அவையாவும் வெறும் நடிப்பு—வெளி வேஷம்: அவற்றினால் வீண் விதண்டா வாதங்களும் வெறுப்புத்துவேஷங்களுமே வளருவதாகும். மதம் என்பது ஒரே உண்மைப் பரம்பொருளை அறியும் சாதனமே, ஆகவே உண்மைக்கொள்கையை கருதினால் எல்லா மதங்களும் ஒரே மதம்தான். எல்லா மதங்களின் ஒரே கொள்கை மனோபலம் பெறுவதே எனலாம். மனோபலம் கேவலம் மிருக பலமல்ல. எளியோரை ஆதரிக்கும் உத்தமதன்மை குணத்தை சிறப்பிக்கும் உயரிய சாதனம்—நன்னடத்தையை வளர்க்கும் உன்னதவழி—இதுவே மனோபலத்தின் போக்கு.

வேதாந்தத்தில் மனோபல தத்துவமே ததும்பி நிற்பதாகப் பெருமையே பேசிக்கொள்ளும் இந்தியாவில் இந்து மதம் எவ்வளவு தூரம் உள்ளன்புடன் ஆசிரயிக்கப்பட்டு வருகிறது? இந்து மதத்தின் அஸ்திவாரமாயிருந்த ஞான தத்துவம் இப்பொழுது எங்கே? தியாகமே ஞானத்தை வளர்த்து உத்தம நிலையை அடையச்செய்யும் என்று கூறி வந்த உயரிய கொள்கைகள் எங்கே? உயர் நடத்தை, உயர்ந்த பழக்க வழக்கங்கள் முதலியவற்றால் கட்டுபடுத்திவந்த வாழ்க்கை நிலை எங்கே? எல்லாம் போய் இப்பொழுதுள்ள கேவல நிலை எங்கே? இரண்டிற்கும் உண்டான பாகுபாட்டைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ!

தனக்குத்தானே பட்டம் சூட்டிக்கொண்ட குருமார்கள்—அவர்களில் பலரோ கல்வியற்ற அறிவிலிகள்—இன்றும் ஊர் ஊராக தேச சஞ்சாரம் செய்து, பெருந்திரளான தமது சகாக்களுடன் சென்று, பக்தகோடிகள் என்ற ஏழை மக்களிடமிருந்து 'காணிக்கை' என்றபெயரால் பெருந்திரளாக, கடுமையாக, வரி வசூலித்துவருவதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? ஊரார் காசை அள்ளி வாயில் போட்டுக் கொண்டு யானைபோல் கொழுத்திருக்கும் இவர்களோ, ஒட்டகத்தினும் குறுகிய நோக்கமும், மனோபாவமும் கொண்டவர்களாயிருக்கின்றனர். இவர்களின் சிஷ்ய வர்க்கங்கள்—கொடிய குற்றம் புரிபவர்களையும் விடக்கொடியவர்களாய் - ஏழைமக்களை சிறு குற்றத்திற்கும் பிரஷ்டம் செய்விக்க ஏற்பாடுகளும் சூழ்ச்சிகளும் செய்து அதன் மூலமாய் தாங்கள் கொழுக்க வழி தேடி வருகிர்கள் என்று சொல்லுவதும் மிகையாகாது. ஏழைமக்கள் என்றால் அவர்கள்மீது சமூக பகிஷ்கார பாணத்தை தொடுப்பது இவர்களுக்கு வெகு எளிது. இதன் காரணமாக மனோதிடமற்ற கோழையினர் உண்மையென அவர்களுக்குத் தோன்றும் மார்க்கத்தில் செல்ல முடியாதவர்களாய் சமூக கட்டுப்பாட்டுக்குப் பயந்து தம் மனோபாவத்திற்கு முற்றிலும் மாறானவழியில் நடந்து வருகின்றனர். இதனால் சமூகக்கேடுகள் பல நிவர்த்திக்க முடியாத வழியில் ஸ்திரமாய் ஊன்றி நாட்டின் நலனுக்கு எமனாக நின்றுவருகின்றன. இன்றோ—நாளையோ—எமனுலகு செல்லவிருக்கும் தொண்டு கிழங்கள் சிறு பெண்களை மணந்து தான் சடுதியில் மண்ணுடன் மறைந்து அவர்களை மீளாத வேதனைக்குள்ளாக்குவது நம் இந்துமதத்தில் வெகு சகஜமாகி விட்டது. விளையாட்டுக் குழந்தைப் பருவத்திலுள்ள பெண்கள் பலவந்தமாக புருஷனுடன் தனியறையில் அடைக்கப்பட்டு இயற்கைக்கு விரோதமாக அச்சிறு வயதில் சக்தியாவும் அழிக்கப்படும் கொடுமை நம் இந்து மதத்தைப் போல் வேறு எம்மதத்தில் உண்டு? புத்தியில்லா மூடக்கொள்கைகளும் பழக்க வழக்கங்களும் மதக் கட்டுப்பாடு என்ற பெயரால் மக்களின்மீது நிர்தாட்சண்யமாகச் செலுத்தப்பட்டு இயற்கையின் போக்கை உடைத்தெரிபவர்களைவிடக் கேவலமான தேசத்துரோகிகள்—வேறு யார் இருக்கின்றனர்? இவர்களா ஈசனை அறிந்தவர்கள்? இவர்களா ஈசனை அடையும் வழியைக் காட்டப் போகிறவர்கள்? இருப்பினும்—அந்தோ—இவர்கள் வாக்கன்றோ வேத வாக்காக நிற்கின்றது! அவர்கள் கட்டளைக்கன்றோ ஏழை மக்கள் பயந்து ஒடுங்கி நிற்கின்றனர்! இவர்களுடைய கொடுஞ்செயல்களைப் பணம் படைத்த பெரியோர்கள் எதிர்க்காமல் சகித்துமன்றோ வருகின்றனர்! கொடுமை! கொடுமை!! இக்கொடுமை பல நூற்றாண்டுகளாக நம் பாரத நாட்டில் தாண்டவமாடி வருகின்றதே! இச்சைத்தான் ஆக்ஷியினின்றும் விடுபட இந்திய மக்கள் கண் விழிக்கவில்லையே! பின் இந்திய மக்களின் மனோநிலைதான் என்ன? அயல் நாட்டாரின் ஆக்ஷி வேண்டாமென கூக்குரலிடக் கிளம்பியிருக்கும் இந்தியமக்களுக்கு தங்களுக்குள்ளிருக்கும் சமூகச் சைத்தானின் ஆக்ஷிக்கொடுமைமட்டும் தெரியாததேனோ! இவ்வித மனோபாவத்துடன் இந்திய மக்கள் இருக்கும்வரை இந்தியா எவ்விதம் ஸ்வயராஜ்யம் அடைய முடியும்? ஸ்வயராஜ்யத்திற்குத்தான் எப்படி அருகதையாக முடியும்?



மைனரின் லீலைகள்.

மாலை 1-மணி தலைவாரிக்கொள்ளும் சொகுசு.



மாலை 3-மணிக்கு நாவல் படிப்பு.

மாலை 5-மணி பெண்களைத் தேடுதல்.



இரவு 11-மணி வேசியுடன் சம்பாஷணை



இரவு 12-மணி சீட்டும் குடியும்



இரவு 2-மணி வேசியின் வேஷங்கள்

காலை 5-மணி நல்ல தூக்கம்



காலை 6-மணி விழிப்பும் கையிலுள்ள காசு போய் திகைப்பும்.

எம்பிராய்டரி கையினால் செய்யப் பட்டவை

பொம்பாய், பார்சி மாதிரி ஜரிகை, பட்டு, பூ வேலைகள் செய்த சேலைகள், ஜாக்கட்கள், ரவிக்கைகள், பாவடைகள், தாவணிகள் உத்படிகள், தலையணை உரைகள், கை குட்டைகள், இன்னும் பல விதமான வேலைகளும் எம்மிடத்தில் குறித்த தவணைப் படி செய்து அனுப்பப்படும் ஆர்டர்களை நானே நேரில் கவனிக்கின்றேன். விலை மற்ற கம்பெனிகளை விட சகாயம்! சகாயம்!! ஒரு முறை பரீட்சிக்கவும்!!!

W. S. கோவிந்தசாமி
ஜரிகை, பட்டு எம்பிராய்டரி பாக்டரி
28 பக்காரு நாய்க்கன் தெரு,
மவுண்ட்ரோட் மதருஸ்.

ஜீவசக்தியின் அவதாரம்

இருபதாம் நூற்றாண்டின் இருபதாம் வருஷத்து இரண்டாம்
பகுதியில் முன் நிறுத்த

சக்தி சஞ்சீவினி மாத்திரை

களை 48 வருஷ கால அபார அனுபவத்தைக் கொண்டு குணங்கொடுப்பதில்
சக்தி வாய்ந்ததும் அதிக விலையுயர்ந்ததுமான அரிய கூட்டு
வர்க்கங்களைக் கொண்டு தயார் செய்யப்
பட்டது. இம்மாத்திரைகள் ஞாபக
சக்தியை விருத்தி செய்து
தேகத்தை வஜ்ர
சரீரமாக்கு
கிறது.

30 நாட்களுக்கு வேண்டிய 60 பொற்பூச்சு பூசின மாத்திரைகள் அடங்கின டப்பி 1-க்கு ரூ. 12.

30 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ 8.

கமிஷன் கிடையாது.

இன்னுமிதர ஔஷதங்களின் விவரம் வேண்டுவோர் இந்த விலாசத்திற்கு எழுதுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, மதராஸ்.

வேசியின் வலை.

சித்ரகூடம் என்னும் பட்டணத்தில் ரத்னதர்மன் என்னும் ஒரு பெருத்த சீமான் இருந்தான். அவனுக்கு இசேந்திரதர்மன் என்னும் ஒரு குமாரன் உண்டு. அவன் கொடிய ஸ்தீரிகளாகிய தாவியின் வலையில் அகப்பட்டு தன்னுடைய பொருள்களை அழித்து விடுவான் என்று எண்ணி தன்னுடைய ஆஸ்திகளை பையன் வசம் ஒப்புவிக்காமல் தானே அவைகளை பாதுகாத்துக் கொண்டு வந்தான். பிறகு தன் பையனுக்கு தாசியின் வலையில் அகப்படாமல் இருப்பதின் பொருட்டு ஒரு உபாத்தியாயினியை வைத்து தக்க வழிகளை சொல்லிக் கொடுக்கும்படிக்கு ஏற்பாடு செய்தான். உபாத்தியாயினியிடம் ஒருவிதமான ஒப்பந்தம் பேசிக் கொண்டான். அதாவது குறிப்பிட்ட காலத்திற்குள் தன்னுடைய பையன் அவளுடைய உபதேசத்தினால் தாசியின் மர்மங்களை கற்றுக்கொண்டு அவளுடைய வலையில் சிக்கிக் கொள்ளாதிருக்கும் படியான நிலைமைக்கு வராவிட்டால் அவள் இவனிடம் இருந்து வாங்கின சம்பளத்தைப் போல் இரண்டு பங்கு திருப்பிக் கொடுக்க வேண்டும். இவ்வொப்பந்தத்திற்கு அவளும் ஒப்புக் கொண்டாள்.

குறிப்பிட்ட காலம் வந்தவுடன் ரத்னதர்மன் தன்னுடைய குமாரனுக்கு புத்தி வந்து விட்டது என்று தெரிந்து கொண்டு தன்னுடைய ஆஸ்திகளின் வரவு செலவு முதலியவைகளைக் கொஞ்சம் கொஞ்சமாக அவன் வசம் ஒப்பிவித்து விட்டான். கடைசியில் பையனையும் ஒரு பெரிய வியாபாரம் நடத்தி வரும்படி வெளிநாடு அனுப்பித்தான். அதில் பையன் மிகவும் நல்ல லாபத்துடன் திரும்பினான். இதிலிருந்து பையன் உபாத்தியாயினியின் போதனையால் பலன் அடைந்து இருக்கிறான் என்று எண்ணி அவளுக்குச் சேர வேண்டிய சம்பளத்தைக் கொடுத்து விட்டான்.

மற்றொரு சமயம் பையனை ஹேமபுரி என்னும் இடத்திற்கு அனுப்பினான். பையன் அங்கே போயிருந்த பொழுது ஒரு தாசியின் நடனத்தைப் பார்க்க நேரிட்டது. அங்கே பையன் போனதும் அவள் வலையில் சிக்கிக் கொண்டான். அதிலிருந்து தகப்பனார் எதற்காகத் தன்னை அனுப்பினார் என்னும் விஷயத்தை மறந்துவிட்டான். கையிலிருந்த காசை அபகரிக்கும்வரையில் தாசி அவனிடம் பிரியமாக இருந்தாள். அவன் கையில் இருந்த பொருள்கள் பாதிக்கு மேல் ஆனவுடன் தகப்பனார் ஞாபகம் வந்து, தான் செய்தது பிசகு என்று ஊருக்குத் திரும்ப எண்ணினான். அவன் புறப்பட்டதும் தாசியின் தாய் தன்மகள் கிணற்றில் விழுந்து விட்டாள் என்று வாசலில் வந்து கூக்குரலிட்டு விழுந்தாள். இக்குரலைக் கேட்டதும் இசேந்திரதர்மன் மறுபடியும் அவள் வீட்டிற்கு ஓடி அவளைக் கிணற்றிலிருந்து வெளியே எடுத்தான். இதெல்லாம் அவனுடைய மிச்சக் காசையும் பறிக்கும் சாகசம் என்பதை அவன் அறிந்துகொள்ள வில்லை. இதன் நிமித்தம் அவன் இன்னும் சிலநாள் அங்கே தங்க

நேரிட்டது. இதற்குள் கையிலிருந்த பணம் முழுவதும் இழந்த பிறகு வீட்டுக்குத் திரும்பினான். தகப்பன் இதைக் கேட்டதும் மிகுந்த வருத்தங்கொண்டு தன் பையனுக்குப் பாடம் கற்பித்த உபாத்தியாயினி சரியாய்க் கற்பிக்கவில்லை என்று எண்ணி தான் அவளுக்கு கொடுத்த சம்பளத்தை விட இரண்டு பங்கு பணம் அவளிடமிருந்து திருப்பிக் கேட்டான்.

அதற்கு உபாத்தியாயினி மறு முறை கொஞ்சகாலைக்குத் தன்னிடம் ஒப்பிவிக்கும்படிக்கும் இன்னும் கொஞ்சம் கற்பிக்க வேண்டியது பாக்கி யிருக்கிறதென்றும் பிறகு நல்ல வழிக்கு வந்து விடுவான் என்றும் சொல்லி மறுபடியும் பாடம் கற்பித்துக் கொடுக்க ஆரம்பித்தாள். அப்பாடமாவது:— ஒரு குரங்கைக் கொண்டு வந்து அதன் வாயில் 100 சவரனை வைத்துக் கொள்ளும்படிக்கும், வேண்டும் பொழுது ஒவ்வொன்றாய் போடும்படிக்கும் தயார்செய்தாள். குரங்கும் அவ்வாறுபழகியவுடன் பையன் அந்தக் குரங்கின் வாயில் 100 சவரன்களை அடைத்து வைத்துக்கொண்டு தாசியின் வீட்டிற்குப் போய் அவள் முன்னிலையில் குரங்கினிடம் இருந்து வேண்டும்பொழுது ஒவ்வொரு பவுனை வரவழைத்தான். அவள் கேட்டதற்கு "இந்தக் குரங்கு வேண்டும் போதெல்லாம் ஒவ்வொரு பவுன் கொடுக்கும்" என்றான். உடனே அவளுக்கு எப்படியாவது அந்தக்குரங்கை அபகரிக்க வேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று. ஆனால் பையன் எவ்வளவு ரூபாய் கொடுத்தாலும் கொடுக்க மாட்டேன் என்று பிடிவாதமாய்ச் சொன்னான். அவனிடம் இருந்து ஏற்கனவே பற்றிக்கொண்டதை விட இரண்டு பங்கு பொருள் தருவதாய்க் கூறியவுடன் அவன் அவளிடமிருந்து இரண்டு பங்கு பொருளையும்வாங்கிக்கொண்டுகுரங்கை அங்கே விட்டு விட்டுத் தன் ஊர்வந்துவிட்டான். குரங்கு தன் வாயிலுள்ள 100 பவுன் ஆகும் வரையில் ஒவ்வொன்றாய் கேட்ட பொழுதெல்லாம் கொடுத்து வந்தது. அதன் பிறகு அது ஒன்றும் போடாததைக் கண்டு தாசி ஏமார்ந்து மிகவும் வருத்தம் அடைந்தாள். அதிலிருந்து ஆண்டியாய்ப் போய் வயிற்றுப் பிழைப்புக்கும் வழியில்லாமல் மிகவும் கஷ்டநிலைமை அடைந்தாள்.

Use Always

RATNA SUPPERIOR ROSE WATER

Tooth powder, best omum water, aniseed water, pure distilled water & Syrups.

Manufacturer:—

P. S. S. RATNAM,

105, Devaraja Mudali St.,

P. T. MADRAS.

டிடக்டாஸ் அல்லது துப்பறியும் கருவி

இதன் உபயோகம் யாதெனில் இருப் பிடத்திலிருந்தே உம்முடைய பின்னும் முன்னும் நடப்பதை ஏக காலத்தில் அறியலாம். வீட்டில் நடக்கும் திருட்டுகளைக் கண்டு பிடிக்க இது சாதனம். ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. 4 படுக்கையறைக் படங்களுடன் விலை ரூ. 2 0 0

பாரிஸ் எம்போரியம்
ஜி. டி, மதருஸ்

இனம்! இனம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self filling பௌன்டன் பேனா இனம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின் புறம் விசித்திர வேலை செய்யப் பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப் படும். கடியாரம் விலை ரூ. 4-12-0, 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
Geore Town, Madras,

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்த படியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால். நிறுத்தவும் செய்யலாம். புயற் காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக் கொண்டு போகக் கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக் கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0.

தபால் செலவு 0—8—0.

இனம்! இனம்!!

டேபில் டைம்பீஸ் இனம்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனமாக சேர்த்து அனுப்பப் படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுங்கள் விலை ரூ. 7—8—0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள்
இதற்கு 8—8—0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.



கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயின் இனும்

நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு, கைகெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம். புதுமாதிரி. பார்வைக்கு அழகாயிருக்கும். சரியான காலத்தைக் காட்டும்.

விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

ஹார்டி அண்டு கோ. ஜார்ஜடவுன், மதராஸ்

நீங்கள் எதிர் பார்த்திருந்த

இன்ப ரகசியங்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
இல்வாழ்க்கையின் ரகசியங்கள்	2	0	காதற் கடிதங்கள்	0	12
ஜீவவசிய பரமரகசியம்	3	0	ஸ்திரி புருஷ சமத்துவம்	1	0
மணவாழ்க்கையின் மர்மம்	2	4	கொக்கோகம்	1	0
மதிமோசக் களஞ்சியம் 2 பாகம்	2	0	மதன ரதி ரகசியம்	1	0
மனோவசிய சாஸ்திரம்	1	8	ஸ்திரி புருஷ ரகசியம்	1	0
கைத் தொழில் வணிக ரகசியம்	1	8	இரதி மதன சிருங்கார ரகசியம்	0	12
மாயாஜால விநோதம்	1	0	சிற்றின்ப சாஸ்திர சிந்தாமணி	0	8
தம்பதிகளின் மர்மம்	1	0	இரகசிய சாஸ்திர சிந்தாமணி	0	8
சரீர மர்ம சாஸ்திரம்	1	0	விகடசித்தர் கோர்வை	0	8
பிரம்மஞான பரம ரகசியம்	1	0	காதலரின் வெற்றி	0	6
சிங்காரக் குழந்தை	0	4	பெண்ணின் பெருமை	2	0

குறிப்பு:—வி. பி. சிஸ்டமில்லாத பினங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர் முதலிய வெளி நாட்டு நண்பர்கள் புத்தக விலையுடன் தபால் செலவையும் சேர்த்து முன் பணமாக அனுப்பி பெறவும்.

வி. ஜி. சங்கர் அண்டு கம்பெனி

தபாற் பெட்டி 1272, மதராஸ்.

இளைஞர்களுக்கு மாத்திரம்

புதிதாக தருவித்துள்ள சரீர சுபாவத்தின் இயற்கையின அமைப்பையும், பலவித லீலைகளையும், அங்க ஸ்திதிகளையும் அழகையுமுடைய பாரிஸ் ஜர்மன் இங்லீஷ் இந்திய படங்களையுடைய 12 படங்கள் கொண்ட ஆல்பம்.

1 க்கு விலை ரூ 3—0—0

ரோம சம்ஹாரி சோப்பு.

இந்த சோப்பை தேகத்தில் எந்த பாகத்திலாவது அனாவசியமாயிருக்கும் ரோமங்களை எடுக்க உபயோகித்தால் உடனே யாதொரு கெடுதியுமின்றி 5 நிமிஷத்தில் எடுத்து விடும். தோலின் வர்ணத்தை மாற்றாமலும், எரிச்சல் இல்லாமலும் தயாரிக்கப் பட்டது. 3 பில்லைகள் அடங்கிய பெட்டி 1க்கு ரூ. 1—0—0.

பிரிமியர் நாவல்டி ஸ்டோர்ஸ்

ஜார்ஜ டவுன், மதராஸ்.

குடியின் கேடு.



ரிக்ஷாக்காரன்:—"கஸ்டம் பார்த்து ஏயைக்கு என்னுன்னுலும் ஒரு அணு போட்டுக் கொடுங்க! ஸாமி''

ரிக்ஷாக்காரன்:— "என்ன ஸாமி! ஏளே வயித்திலா அடிக்குனு; ! 10-அணு பேலினியே ஸாமி! அடே! தலே குட்டையை பாருடா! பலே! பெரிய மனிஸருடா இவரு''

ரிக்ஷாக்காரன்:—"அண்ணுத்தே! எம் வவுர குளிர 2-மொந்தை ஊத்து அண்ணுத்தே! எங்கப்பன் மவராஸன்! ஸாமி! நல்லாருக்கணும் !''

ரிக்ஷாக்காரன்:— "அடே! குப்பா! நம்ப எங்ஙனே இருக்கண்டா! மானத்திலே இருக்கோமில்லே! வொக்களே! குடிகார பசங்களே ஒதிக்கணுண்டா''

(5)

ஜனங்கள்:— "அந்த பேமானிபய! பொம்பில்லே காதே அறுத்திட்டு ஓட்ராண்டா! பூரா குடிச்சுட்டு நாஸ்தாக்கு பாத்தாப்பிலே இருக்குடா" பிடிரா! பிடிரா!

(6)

ரிக்ஷாக்காரன்:— (வீடு சென்று) என்னடி! எந்தப் பயலுக்கடி சோறு வாத்தே! ஓடு ஒங்கப்பன் வூட்டுக்கு! சோறும் வாண்டா ஒண்ணும் வாண்டா"

(7)

போலீஸ்காரன்:— "என்ன குடித்தாலும் நிதானம் கெட்டுப்போமமா! ரிக்ஷா இழுக்கர பஸங்கோ திருட்டு பஸங்கோ வாடா டேஷனுக்கு செமத்தியா இருக்குது வா"

(8)

ரிக்ஷாக்காரன்:— "ஐயோ குடிச்சுக் கெட்டேன் சாமி எங்குடியுங் கெட்டுது ஸாமி! இனிமே எஜமான் குடிக்கிலே ஸாமி! வுட்டுடுங்க"

எது சரி?

(S. T. R. Chary)

ஜெயம்:—பாட்டி என் ஒடம்பு என்னமோ பன்றது எனக்கு இன்னது பன்றது என்று சொல்லத் தெரியவில்லை.

ஞானம்:—சொல்லத் தெரியாமே என்ன உடம்புடி அது? நன்னயிருக்கு நீ சொல்வது என்னகஷ்டமோ, நான் வைத்திய சுப்பராயன் வீட்டுக்குப் போய் அவனை அழைத்து வருகிறேன்.

ஜெய:—சுருக்க வராயா பாட்டி?

ஞானம்:—வராமே என்ன அங்கே ஊஞ்சல் ஆடப் போகிறேனே!

ஜெய:—கோச்சுக்காதே பாட்டி: நீ எப்போ வானாலும் வா.

(பாட்டி வைத்தியனை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வருகிறாள்).

ஞான:—சுப்பா! குழந்தை கையைப் பாரு.

சுப்ப. (கையைப் பார்த்துக் கொண்டே சரி தான் நான் அப்பவே நினைத்தேன்.)

ஞானம்:—சுப்பா என்னடா பார்க்கும் பொழுது முணகிறே. எனக்குப் பயமாயிருக்கு.

சுப்பா:—இல்லையம்மா. இல்லை பாதகமில்லை, சொஸ்தப் படுத்தி விடலாம். ஆனல்———,

ஞானம்:—சரி குழந்தைக்கு இன்னும்ஒரு வாரத்தில் கலியாணம் அதற்குள் உன்னல் சொஸ்தம் செய்ய முடியுமா?

சுப்பா:—மு...டி...யு...ம்...

ஞான:—என்டா இழுதாப்பலே பேசரே.

சுப்பா:—இல்லையம்மா. இல்லே ரூபாய் செலவாகுமே என்று யோசனை செய்ரேன்.

ஞான:—இந்தாடா சுப்பா. நீ என்னிடத்தில் வைத்தியப் பொய்களைச் சொல்லாதே. பளிச்சினு என்ன செய்ய வேண்டும் என்று சொல்லு.

சுப்பா:—நம்மளுக்குள்ளே என்னம்மா உங்கள்ண்டே தாரந்து சொல்ரேனே, கையைப் பார்த்தேன் பித்தம் மேலிட்டு பிடிவாதத்தை தூக்கி விட்டிருக்கிறது.

அதற்கு இஷ்டபஸ்பம் மூன்று வேளை பத்தியம் இல்லாமல் கொடுத்தால் குணமாயிவிடும். அதற்கு ரூ 100 பிடிக்கு. இதாம்ம உள்ள கருத்து. அய்யரு வர விட்டு யோசித்து எனக்கு ஆள் அனுப்புங்க நான் உடனே வாரேன் அம்மா உத்தரவா?......ஞாபகம் இருக்கட்டும்

(வைத்தியன் போய் விடுகிறான்).

(பெண்ணின் தகப்பன் வேணுவைய்யர் வந்ததும் குழந்தையின் அசௌக்யத்திற்காக இங்கிலீஷ் டாக்டரை வரவழைக்கிறார்)

வேணுவையர்—டாக்டர்வாள் வரணும் உங்களைத் தான் எக்ஸ்பெக்ட்டு (**expeet**) பண்ணிக்கொண்டு இருக்கிறேன். நம்யாத்துக் குட்டி என்னமோதெரியவில்லை இருந்தாப்லே இருந்து பீவரால் (fever) ஸபர் (suffer) பண்ணுகிறாள். இன்னும் ஒரு வாரத்தில் அவளுக்கு மாரியேஜ் (Marriage) வருகிறது. அதர்குள் சொஸ்தம் செய்ய முடியுமா? தயவு செய்து நல்ல மெடிஸன்கள் கொடுக்கவும். (டாக்டர் துரை. டிக்ரியைவைத்து மார் வாய் முதலிய இடங்களில் வைத்துப் பார்த்து பிறகு ஸ்டெதஸ் கோப்பையையும் (Stethescope) வைத்துப் பார்த்து விட்டு சொல்லிகிறார் Brother பிரதர் உங்கள்டாட்டரை (daughter) (examine) எக்ஸாமின் பண்ணிப் பார்த்தேன். கண்டிஷன் (condiction) ரொம்பஸிரியஸாய் இருக்கிறது. (Serious) உடனே பார்கவும். ஏனெனில் (Lungs weak) லங்ஸ்பதால் Heart

affect) பண்ணிகிறது. you better send your daugder with me இஞ்ஜக்கஷன் செய்தால் சவுகரியமாய் விடும் (என்று சொல்லி விட்டு ஆபிஸுக்குப் போகிறார். இவர்களும் கூடப் போய் இஞ்சஜக்ஷன் செய்தார்கள் பிரயோஜனப்படவில்லை.)

ஜோஸ்யர் ஒருவர் அங்கு வரநேர்ந்தது).

வேணு:— ஜோஸ்யர்வாள். வாருங்கள் வாருங்கள். நீங்கள் கூட என்ன சொல்லியனுப்பித்தும் இவ்வளவுநேரம். குட்டியின் ஜாதகத்தை பாருங்கள்.

(ஜோஸ்யர் ஜாதகத்தை வாங்கி பார்த்து மனதுக்குள் விரல் விட்டு எண்ணுகிறார்.)

ஜோஸ்யம்:—(நடேசய்யர்) ஜுரம் வராமல் என்ன செய்யும். வரத்தான் வரும். ஏனென்றால் மூன்றாம்மடத்தில் இருக்கும் சந்திரன் நேராக 9 மடத்திற்கு பேர்வதால் சூர்யன் கிழக்கிலிருந்து மேற்கே செல்லுகிறான். அதனும் சனி பார்வையில் இருப்பதால் ஜுரம் வருகின்றது இன்னும் 6 மாத 13 நாள் வரையிலும் எம்மருந்தும் பிடிக்காது. வீண் செலவு வேண்டாம். சனீஸ்வரனுக்குமட்டும் தினம் பூஜை செய்து வாருங்கள். அதுதான் தற்கால சாந்தியாகும் 6 மாதத்திற்கு பிறகு தான் குணம் ஆகும் ஆகாது என்று சொல்ல முடியும். ஆனால் குழந்தையைப்பற்றி கவலை வேண்டாம். சரி நான் போய் வருகிரேன். ஏனென்றால் அவசரமாக ஒரு கலியாண ஜாதகம் பார்க்கவேண்டும். (விடை பெற்றுக் கொண்டு ஜோஸ்யர் போய் விடுகிறார்)

(சாமியார் ஒருவர் வருகிறார்)

ஞானம்:— சாமியாரே எங்கே கண்ணுலேயே காணும்.

தங்கவேல்சாமி:— காணுமல் என்ன. சேஷியாத்துக்கு வந்தேன் அவாத்தில் நம்மாத்து குழந்தைக்கு என்னமோ உடம்பு சரி இல்லை என்று சொன்னாள். அதைக் கேட்டதும் நான் இங்கு வந்தேன். குழந்தை எங்கே.

ஞா:— இதோ பாருங்கோ நாலு நாளா ஜுரமாதிரி என்னமோ பன்றது குழந்தை பாவம் ஒன்றும் சொல்லத் தெரிலே. நான் அப்பவே எம்புள்ளேயே உங்களை கூப்பிட்டு வரச் சொன்னேன். நான் சொன்னா இந்தாத்தில் என் பேச்சை யார் கேட்கிரா? வீணாலே கண்டபடி ரூபாயைசெலவழித்தான். அதனால் கண்ட பலன் குழந்தைக்குக் கொஞ்சம் கூட சொஸ்தம் ஆகவில்லை. நீங்கள் உங்காத்துக் குழந்தைபோல் நினைத்துப் பார்க்கணும் செத்தை நன்றாய்ப் பாருங்கோ.

தங்க.வே:— நீங்கள் எனக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. நான் புதிதா. அல்லது இன்னி சினேகிதமா? அய்யருக்காக அல்ல பார்க்கிறேன். சரி குழந்தையை இப்படி அழைத்து வாருங்கள் பாருப்போம்.

(குழந்தை சற்று ஒத்துப்பார்க்கிறார்)

பாட்டியம்மா. இனி குழந்தையைப் பற்றி நீங்கள் கவலையே பட வேண்டாம். இது பார்வை குணம். மூணு நாள் ஜபம் வைத்து தொண்ணூறு போட்டால் ஓடியே போய் விடு ஆனால் மூணு நாள் ஜபத்திற்கு ரூ 150 செல்லும். புள்ளைவந்ததும் யோசித்து எனக்கு ஆள் அனுப்புங்கள். சட்டாயம் நான் வந்து கலியாணத்திற்குள் சொஸ்தம் செய்து விடுகிறேன் இப்போது பார்க்காவிட்டால் அப்பால் மிஞ்சிப்போய் விடும். பாட்டியம்மா ஞாபகம் இருக்கட்டும் போய் வருகிரேன்.

(சாமியார் இருப்பிடம் போய் விடுகிறார்)

ஞா:— வேணு. இப்போதான் நம்மாத்து சாமியார் வந்தார். குழந்தை ஜயாவைப் பார்த்தார். அவர் மூணே நாளில் சொஸ்தப் படுத்தி விடுகிறேன் என்று சொன்னார். அவர் போன வாரத்திலே சேஷி அக்கா பெண்ணுக்கு

இப்படித்தான் இருந்தது. ஒரு மருந்தும் பிடிக்கவில்லே கடைசியில் இவர் போய்த்தான் சொஸ்தமாச்சு. நான் இவரைக் கெண்டு பாரு வீணுக காசை சரியா அடிக்காதே என்னு சொன்னு என் வார்த்தையை யார் கேக்கரு இந்தாத்திலே. யாருக்கென்ன குழந்தை தேமேனு அவஸ்தைப் படுகிறது.

வேணு:— ஆமாண்டி எல்லாரு பேச்சையும் கேட்டுக் குழந்தை ரொம்ப குணமாகி விட்டது. இன்னுமே உன் பேச்சைக் கேட்க வேண்டியதுதான் பாக்கி. உனக்கு என்ன செய்ய வேண்டும் சொல்லு அதையும் பார்த்துத் தொலைச்சி விடுகிறேன். பின்னல் என் பேரில் அதொன்று பாக்கி என்று புகார் செய்யாதே குழந்தை பிழைக்காது என்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். ஏனென்றால் நாலு நாளா நம்மாத்து வாசல்லே நாய் அழுது கொண்டு இருக்கிறது போராத்துக்கு சாவுகுரு விசத்துகிறது.

(இவர்கள் பேசிக் கொண்டு இருக்கையில் ஜயம் வெளியில் ஒரு குடு குடுப்பாண்டி வரவும் வாசலில் போய் அவனை ஜோஸ்யம் கேட்க போய் விட்டாள்)

குடு குடுபாண்டி. குடு, குடு, குடு, அம்மா ஊட்டுக்கு அய்யோண்டு ஒரு தேசை வரது. குடு, குடு, குடு. ஊட்லே கண்ணுலம் வரது சொல்ல ராங்க ஆயி மலேயாள பவதி குடு, குடு, குடு. என்று சப்திக்கிறன்.

ஜெயம்:— இருடா உனக்கு ஜோஸ்யம் தெரியுமா.

குடு:— நமக்கு ஒண்ணும் தெரியாது. ஆயி மலேயாள பாவதி சொல்லுவா. குடு, குடு, குடு......

ஜெய:— நான் நினைத்திருப்பதை சொல்லிவிட்டால் உனக்கு 1-ரூபாயும் நல்ல பழம் வேஷ்டியும் கொடுப்பேன் நீ உன் மலேயாள பாவதியை கேட்டுச் சொல்லு.

குடு:— சரி ஆயி மலேயாள பாவதி சொல்லுடி: அம்மா ஊட்டுக்கு அய்யோண்டு இந்த வாரத்தில் கண்ணுலம் ஆகப்போகிற......து குடு, குடு, குடு,......... தெற்கேயுள்ளவரன் நடாக்காது. குடு, குடு ———குடு வடக்கேயுள்ளதுதான் முடியும்.

குடு—குடு—குடு...———

ஜெய:— அடே இந்த 1-ரூ யும் துணியும் ஒருவருக்கும் தெரியாமல் எடுத்துக்கொண்டு அடுத்த வீட்டுக்குப் போய்விடு.

(இதற்கு ஞானம் குழந்தை படுக்கையில் இல்லாததால் தேடுகிறாள்)

ஞா—: என்னடா...வேணு குழந்தையைக் காணும். படுக்கையில் இல்லேய.

ஜயா:— ஏம்பாட்டி...ஏ...வாசல்லே போனல் தேவலேப்போல் இருந்தது. போனே. கோச்சுக்காதே.

பாட்டி:— நன்று இருக்கடி நன்றுருக்கு. நாலு நாளாய் உடம்பு சரியில்லே என்னு படுத்த படுக்கையாயிருந்தே அவன் தேமேனு ரூபா ரூபாய வீணுக செலவு செய்து வைத்தியம் பார்த்து அவஸ்தைப் படறன். நீ வாசல்லே போய் ஜோக்கா உலாவரே. ஒடம்பு ஒன்றும் இல்லேபோல் தோன்றுகிறது. வீண் பாசாங்கு செய்யறே. என் இப்படி எங்களை துன்பப் படுத்துறே. உன் மனதில் உள்ளதை சொல்லி விடு.

ஜயா:— (கோபம் வந்து விட்டது)

ஆமாம் பாட்டி எனக்கு ஒடம்பு ஒண்ணுமில்லேதான் பாசாங்குதான் செய்ரேன் இப்போ நான் என்ன செய்யணுங்கிறே? யார் அப்பாவை வீணு அவ்வளவு ரூ செலவழிக்கச் சொன்னுல் துரைசாமி அய்யரை கலியாணம் செய்துகொள்ள ணும்என்று வற்புறுத்தியதால் மனேவியாதி கொண்டேன் அதான் எனக்கு வியாதி வேறு ஒன்றுமில்லே' என்னை என் மாமா சீனுவுக்கு விவாகம் செய்து கொடுத்தால் என் வ்யாதி தீர்ந்து விடும் இல்லை விட்டால் ஒரு மருந்துக்கும் பலிக்காது அவ்வளவுதான் பாட்டி புரிஞ்சுதா போ.

பாட்டி:— யாரேடி சீனுவையா?

ஜெய:— ஆமாம்......அவரைத்தான், நான்தான் அப்பவே சொன்னேனே.

வேணுவையர்:— அம்மா குழந்தைக்கு வியாதி முற்றி விட்டது அதான் உளறுகிறுள் என்ன செய்யலாம் அதற்கு.

'கமலவேணி' (பெண்ணின் தாயார்:)—உங்களைத் தானே நான்தான் அப்பவே குழந்தைக்கு ஒன்றுமில்லே கலியாணம் எக்கம்தான் என்று சொன்னேனே. நீங்கள் பேசாமல் என்தம்பி சீனிவாஸனுக்கே கலியாணம் செய்து கொடுத்து விடுங்கள். உடம்புசரியாய்ப் போய்விடும்.

வேணு:— போடி உள்ளே உன் யோசனே எனக்கு வேண்டாம். எனக்கு அப்பவே தெரியும். நீதான் குழந்தைக்கு இந்த விதமான துற் போதனைசெய்து மனதை துரைசாமி அய்யரி டமிருந்து ஸ்ரீனுக்கு மாற்றிருக்கிறது.

கமல:—சரி என்பேரில் கோச்சுக்காதேயுங்கள். நீங்கள் எப்படிவானு செய்யுங்கள் எனக் கென்ன.

வேணு:— எம்மா. ஒருக்கால் குழந்தைக்கு தெய்வக் கோளாறு இருக்குமோ அதையும் கடைசி யாக பார்த்து விடுவோம்.

பாட்டி:— ஆமாண்டா நான் அப்பவே அதை உன் னிடம் சொல்லனும்னு நினேச்சேன் நீ கோச் சுக்குவேயே என்று பெயந்து சொல்லாமல் இருந்தேன் சரி உடனே அம்மன் கோவில் பூசாரியை வரவழை.

(பூசாரி வருகிருன்)

வேணு:— ராமா நம் குழந்தைக்கிடா தெய்வக் கோளாறுபோல் இருக்கு அதற்கு என்ன செய்கிறது.

பூசாரி:— இன்றைக்கு வெள்ளிக்கிழமை அம்மனை வரவழைத்து குறி கேட்போம். தேங்காய் கூடம் சாம்பிராணிர் முதலியவைகள் சீக்கிரம் கொண்டு வரச் சொல்லுங்கள்.

(கூடம் சாம்பிராணி போட்டு தேங்காயு டைத்து உடுக்கடித்து சுவாமி வரவழைக்கிருன்.)

பூசாரி:— உண்டிக்கு 5-ரூ போடுங்கள் அம்மா ளைக் கூப்பிடுவோம்.

வேணு:— சரி இந்த ரூ-5.

(பூசாரி:— ரூபாயை மடியில் சொருகிக் கொண்டு உடுக்கடிக்கிருன்)

பூசாரி:— கோபுரம்போல் வில் வளைத்தான் டும்......டும்......டும்

வா டி மாரியாத்தா......டும்......டும்......டும்
வந்து பதில் சொல்லுடி ஆத்தா...டும்...டும்
கோபம் கொள்ளாதேடி...டும்...டும்

........பதில் சொல்லு டி...டும்...டும்...டும்

(அதற்குள் பூசாரியின்மேல் ஆவேசம் வருகி றது ஆடுகிருன்)

சாமி:— நீ என்னை மறந்து விட்டேடா........ எனக்கு பூசை போடல்லேடா......
பாரு இன்னும் என்ன செய்கிறேன். பார் உயிரைக் கொண்டு போய் விடுகிறேன்.

(அதற்குள் கிட்ட இருப்பவர்கள்)

அம்மா, தாயே, நீ அப்படி செய்யக்கூடாது. நீதான் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும். உனக்கு தப்பிதத்திற்காக ரூபா 50 இதோ முடிந்து வைக்கிரேன். குழந்தைக்குக் கல்யா ணம் ஆனதும் முதல் முதல் பிறக்கும் குழ ந்தைக்கு உன்னுடைய சன்னிதானத்தில் கொண்டு வந்து முடி வாங்கரேன்.

சாமி:— நீ செய்யாயடா! சத்தியம் செய்து கொடு... (பிறகு அருள் நின்று விடுகிறது)
(கடைசியில் தகப்பன் தன் மனைவி சொல்லிய படி குழந்தை இஷ்டம்போல் விவாகம் செய்த பிறகுதான் வியாதி குணமாகிறது)

———

குதிரைப் பந்தயச் சூது.



ஹல்லோ! பிரதர்! கிண்டி குதிரைப்பந்தயம் ஆரம்பமாய்விட்டது பிரதர். நியூஸ்பேப்பரைப் பாருங்கள்.

ஒவ்வொருவரும், லக்ஷ ரூபாய் இனாம் தனக்குத்தான் கிடைக்குமென ஆகாயக் கோட்டை கட்டுகிறார்கள்.



பெண்:- சேட்! என் நகையை வைத்துக் கொண்டு ஏதாவது பணம் கொடு. அவசரமாய் ரேஸுக்குப் போகணும்.



மனைவியுடன் சண்டை போட்டு ஓடோடியும்வந்து பந்தயத்தில் பணத்தைக் கட்டிய பரமோத்தமர்.



குதிரைகள் வாயு வேகம் மனோ வேக மாய்ச் செல்லுகின்றன. ஜனங்களின் ஆர் பாட்டமோ காது செவிடு படுகிறது.

குதிரையோடும் உற்சாகத்தில் கத்திக் கத்தித் தொண்டையும் போய், பந்தயத்தில் கட்டின பணமும் போய் "அந்தோ! விதியே!" என்று ஸ்மசான வைராக்யம் பேசும் நிலைமையாயிற்று.

ஸ்ரீ கோமதி கண்ணமாவின் பிரசங்கம்



எங்கள் அன்பார்ந்த எஜமானர்களே? அடிக்கடிப் பேசும் இவ்விடத்திலே கேவலம் பசுவாகிய நான் இன்று உங்களிடை வந்து உபன்யாசிப்பது உங்களுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கும். இக்காலம் கடற்கரையில் கூட்டம் கூடி ஜனங்கள் தங்கள் குறைகளைப்பற்றிப் பேசுவதுதான் வழக்கமாயிருக்கிறது. ஜனங்களில் குறையுள்ளவர்கள் தங்கள் குறைகளைக் கேட்க ஒருவரும் இல்லாத நிலைமையில் இக்கடற்கரையில் வந்து ஓலமிடுவதை நான் கண்டும் கேட்டும் இருக்கிறேன். ஆனல் இன்று நான் அம்மாதிரி ஓலமிட வரவில்லை. ஜனங்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டியவர்கள் அவர்கள் உபன்யசிக்கும் கூட்டங்களுக்கு வருவது கிடையாது' அதைப்போலன்றி எங்கள் குறைகளைத் தீர்க்க வேண்டியவர்கள் நீங்களாகி விட்டதால் எங்கள் துன்பமும் கொடுமையும் ஒழியுமென்று இங்கு இன்று பேசவந்தேன்.

பசுக்கூட்டத்தில் என்னை எல்லாப் பசுக்களும் சேர்ந்து பிரதி நிதியாகத் தெரிந்தெடுத்து உங்களிடை எங்கள் குறைகளை அறிவித்துக் கொள்ளும்படி எனக்கு உத்தரவிட்டன. அவ்வுத்தரவைச் சிரமேற்கொண்டு இன்று இவ்வுபன்யாசத்தைச் செய்கிறேனுகையால் நான் கூறுவதை பொதுவாக பசுக்கள் அறிவிப்பதாகவே நீங்கள் கொள்ள வேண்டும். இத்தேசத்தில் எங்களைப்போல உங்கள் இனத்தாரால் போற்றப்பட்டு வந்த பிராணி வேறு எதுவுமில்லை. எங்களை நீங்கள் முற்காலத்தில் எப்படி அளவுக்கு மிஞ்சி புகழ்ந்து போற்றி வந்தீர்களோ, அவ்வளவுக்கு நேர் விரோதமாக அளவுக்கு மிஞ்சியே இது காலத்தில் எங்களை கேவலப்படுத்தி வருகிறீர்கள். எங்களை தெய்வத்தன்மை பொருந்தியவர்களென நீங்கள் கொண்டாடினீர்கள். எங்கள் சரீரத்தில் முப்பத்து முக்கோடி தேவர்கள் வசிப்பதாக நீங்கள் ஸ்தோத்

திரம் செய்தீர்கள். நாங்கள் உங்கள் வீட்டிலிருந்தால் புண்யம் என்று கருதினீர்கள். எங்கள் பால், நெய், தயிர்களை மனமுவந்து ஏற்று அருந்திச் சுகிக்கின்றீர்கள். எங்களிடமுள்ள விசுவாசத்தினால் எங்கள் சாணமும் மூத்திரமும் கூட ஏற்றமென்று கொண்டாடினீர்கள். எங்களை முக்காலும் பூஜித்து வந்தீர்கள். சுருங்கக்கூறில் எங்களை தெய்வமாகவும், பந்துவாகவும், செல்வமாகவும், உபகாரியாகவும், கருதி ஆதரித்து வந்ததுமின்றி எங்கள் உதவியையே ஜீவனோபாயமாகவும் நீங்கள் முற்காலத்தில் கொண்டிருந்தீர்கள். எங்கள் சாணத்தை எரித்து பஸ்பமாய் தரிக்கிறீர்கள். எங்கள் உதவியாலன்றோ உங்கள் விவசாயம் நடைபெறுகின்றது. எங்கள் இனப்பசு ஒன்றின் மீது தேரை ஏற்றிக் கொன்றுவிட்டதற்காக தனது புத்திரனை முற்காலத்தில் மனுநீதிச் சோழன் தேர்காலில் கொடுத்தானென்றால், நாங்கள் உங்கள் இனத்தாரால் முற்காலத்தில் எவ்வளவு கௌரமாக நடத்தப்பட்டு வந்திருக்கவேண்டுமென்பதை நேயர்களே யோசியுங்கள். ஸ்ரீ கிருஷ்ணபகவான் எங்களைக் கண்ணினைக்காக்கும் இமைபோலன்றோ காத்து வந்தார். இப்படியாக நாங்கள் முற்காலத்தில் உங்கள் பெரியோர்களால் போற்றப்பட்டு வந்த சீர்மையை விரிக்க ஒருவராலும் இயலாது. எங்கே தங்கள் காலத்துடன் பசு ரக்ஷணம் நின்று விடுமோவென்று பயந்தே எங்களைக்காத்து ரக்ஷித்தலே தேச க்ஷேமத்திற்கு அவசியமென்பதை தம் பின்புள்ளார் உணரவேண்டுமென்று உங்கள் முன்னோர்கள் எங்களைப்பற்றி அதிக சிறப்பாக பல நூல்களில் எழுதி வைத்து மிருக்கிறார்கள். எங்கள் பண்டைப் பெருமைகளைப் பற்றி நீங்கள் அறிந்துக்கொள்ள விரும்புவீர்களானால் பெரிய புராணத்தில் சண்டேஸ்வர நாயினார் புராணம், மனுநீதி கண்ட புராணம், ரகுவம்ஸத்தில் தேனி வந்தபடலம், பாரதத்தில் படைமீட்சிச் சுருக்கம், சிந்தாமணியில் கோவிந்தையாரிலம்பகம், இவைகளைப் படிக்கும்படி நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படி மேன்மையாக வாழ்ந்து வந்த நாங்கள் தற்காலம் அனுபவித்து வரும் கஷ்டங்கள் ஒன்றிரண்டல்ல. எங்கள் கதியை நாங்கள் எங்ஙனம் எடுத்துரைப்போம்.

ஐயோ! நாங்கள் பால் கொடுத்து, தயிர் கொடுத்து, வெண்ணெய் நெய் அளித்து உங்கள் முன்னோர் வேள்விகளைக் காத்ததை மறந்தும், உங்களுக்கு இன்னமுது அளித்துக் காத்தும், உங்கள் குழந்தைகளைப் போஷித்து வளர்த்தும் வரும் நன்றியை முற்றிலும் மறந்தும் எங்களை ஏரில் கட்டியும், ஏற்றத்தில் பூட்டியும், அடிக்கிறீர்களே, வண்டியில் கட்டி விதைக்கிறீர்களே? பில்லின்றி கல்லும் மண்ணும் நிறைந்த கட்டாந்தரையில் காலைக்கட்டி விட்டுவிடுகிறீர்களே? கொஞ்சமேனும் கருணையில்லையா? நாங்கள் சில கோரிக்கைகளை வேண்டுகிறோம். அதன்படி நீங்கள் நடந்து வந்தால் போதுமானது. தோல் கன்று வைத்து பால் கறக்காதீர்கள். கறவை நின்று விட்டால் நிரந்தரமாக எங்களுக்குப் போடும் அறை ஆகாரத்திலும் மண்ணைப் போட்டு விடாதீர்கள். எங்களைப் பவுண்டுகளில் அடைத்தால் எங்களுக்காகப் பவுண்டு கீப்பர்கள் பெறும் செலவு தொகையில் அவர்கள் வீட்டுச் செலவுபோக மிச்சம்

100 இல் ஐந்து பங்காவது எங்கள் வயிற்றுக்குத் தீனி வாங்கிப் போடச் சொல்லுங்கள். எங்களை ஏலம் போடுபவரிடம் எங்களை அடித்துத் தின்பவரிடம் எங்களை ஏலத்தில் விடாமலிருக்கச் சொல்லுங்கள் எங்கள் குழந்தைகளுக்கு வாய்ப் பூட்டு பூட்டாதீர்கள். பால் கறக்கும்பொழுது எங்கள் குழந்தைகளுக்கு ஒரு சொட்டுக்கூட விடாமல் நீங்கள் கறப்பதைப் பார்க்க எங்கள் வயிறு எறிகிறதே. நாங்கள் நக்குவதினால் எங்கள் குழந்தைகள் பசி தீர்ந்து விடுமோ? எங்களை அடிக்காதீர்கள். வாயில்லை. எங்களுக்கு எது வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் எங்களைக் கண்டவுடன் அப்படியே கொன்று தின்ன விரும்பும் கொடும்பாவிகளிடம் எங்களைக் காட்டிக் கொடுக்காதீர்கள். உங்கள் காலில் விழுகிறோம். நீங்கள் எங்களை உதைத்துத் தள்ளினாலும் இந்து மதத்தைத்தவிர வேறு எங்களுக்குப் புகலிடமில்லை. உங்களைத் தவிர வேறுகதியும் எங்களுக்கில்லை. ஐயோ? இவ்வளவு கேவல ஸ்திதியில் எங்களை நீங்கள் வைத்து விட்டு, வருஷத்திற்கு ஒரு நாள் மஞ்சள் பூசி, நீராட்டி, பூச்சூட்டி, தார்மாட்டி, பொங்கலிட்டு கும்பிட்டு பொங்கல் பண்டிகையென்று ஒரு பண்டிகை செய்கிறீர்களே? அப்போது எங்கள் வயிறு பற்றி எறிகிறது. பொங்கல் பூஜையிட்டு மறுநாள் முதல் பங்கமுறச் செய்கிறீர்களே? இது தருமமல்ல; செய்நன்றி மறப்பது அழகாமோ? யோசியுங்கள்.

இறுதியில் ஒன்று சொல்லுகிறேன். பசுவோங்கப் பாலோங்கும். பாலோங்கக் கண்ணோங்கும் கண்ணோங்க விளைவோங்கும். விளைவோங்கக் குடியோங்கும். குடியோங்கக் கோலோங்கும். பசு நாசமுறின் அதன் கீழ் கண்டயாவும் நாசமுறுமல்ல எஜமானர்களே? ஹிந்துக்களான உங்களைத் தவிர வேறு எங்களைக்காப்பார் உலகில் எவருமில்லை. உங்கள் சுயராஜ்யம் பிரிட்டிஷாரிடம் கட்டுப்பட்டிருக்கிறது. ஆதலின் எங்களுக்கு நீங்கள் முதலில் சுயராஜ்யம் கொடுத்தால் உங்களுக்கு சுயராஜ்யம் தானாய் வரும்.

சரீர மர்ம சாஸ்திரம்.

தமிழ் பாஷையில் இவ்வளவு பூரணமான இரகசிய சாஸ்திரம் இது வரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடப் படவில்லை. இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும், அவர்களது சரீர அமைப்பும், அவைகளின் சேர்மையான உபயோகங்களும், ரதி மன்மத சிருங்கார ரஹஸியங்களும், ஆண் பெண் சிசு உற்பத்தி விவரமும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும், மகரிஷிகளால் மரமமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும், விவாகமானவர்களுக்கும் இனிமேல் விவாகம் செய்து கொள்ளும் சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல், 64 படங்களுடன் சுமார் 200 பக்கங்களுடைய புத்தகம் விலை ரூபாய் 1.

கைத்தொழில் வணிக இரகசியம் விலை 1 8 0 பிரம்ம ஞான பரமரகசியம் விலை 1 0 0

மாணிக்க விலாஸம் பிரஸ்,
அருணாசல முதலி தெருவு, சென்னை

3-ம் பதிப்பு! **3-ம் பதிப்பு!!**

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

இதன் முதலிரண்டு பதிப்புகளின் 5000 பிரதிகள் இரண்டே மாதங்களில் செலவழிந்து விட்டன.

400 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம்

அழகான பயிண்டு. நேர்த்தியான அச்சு.

அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் திருத்தியமைந்தது.

இந்நூலில் அடங்கியுள்ள சில விஷயங்கள்

பெண்ணின் பெருமை, பெண்கல்வி — நாணம் — காதல், காமம்—மனைவி வசியம், கணவன் வசியம்— பெண்களின் அமிருத நிலை—மாதவிடாயின் மர்மம்—சங்கம காலச்சேஷ்டைகள்—மனம் போல் மக்களைப் பெறுவது—கர்ப்பகாலம்—சுகப் பிரசவம்—சிசுவின் வளர்ச்சித்தத்துவம்—ஆண்மலடு, பெண்மலடு—தற்புணர்ச்சி—ஒருவன் எத்தனை மாதரை மணம் புரியலாம்—தாசிகள் வீடு போகும் நண்பர்களுக்கு நாம் சொல்லக் கூடிய சில வார்த்தைகள்—ஸ்திரீ ரோகங்கள்.

இன்னும் எத்தனையோ நூற்றுக் கணக்கான பொன் போன்ற இரகசியங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

ஷை புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக ஷாப்பிலும் கிடைக்கும்.

விலை ரூபா **2.**

வாஸன் புஸ்தகசாலை,
தபால் பெட்டி 119,
97 அண்ணாபிள்ளைத் தெரு,
ஜி. டி. மதராஸ்.

பிச்சைக் காரர் பிழைப்பு.

ஐயா! சாமீ! காலில்லா முடவனாச்சே! ரெக்கையில்லா பறவையாச்சே! ஓடிச்சம்பாதிக்க வழியில்லையே! காலணா கொடுங்களேன். ஐயா! புண்யவான்களே!

இன்னிக்கு நரி முவத்திலே முழிச்சேன். நல்ல காசு சேர்ந்துச்சு. வெளியூரு ஆளுங்க கூட்டம் ரொம்பவா! நம்ப வேலைத்தனம் நல்லா பலிச்சுச்சு.

நேரமாச்சு! நல்லதுட்டு சம்பாரிச்சுட்டேன்! இன்னமே முடவன் வேஷமெல்லாம் பறந்துடாதா?

பிச்சைப் பிழைப்பு நல்ல பிழைப்பு. கையில் நல்ல காசு மாச்சு! வாயில் உயர்ந்த சுருட்சு மாச்சு! வயிறு நிறையக் கள்ளு மாச்சு.

"வெளுத்ததெல்லாம் பாலல்ல."

ஓர் சிறு கதை.

[கல்யாணம்]

அமாவாசை தினம். எங்கும் இருள் கவிந்து நிற்கிறது. இருந்தாலும் சென்னையாகையால் ரஸ்தாவெங்கும் மின்சார விளக்குகள் பிரகாசிக்க இருளின் வேகம் தெரியவில்லை. ஆனால் நிசப்தமான இரவு. நேரம் அதிகமாகி விட்டதால் மோட்டார் பஸ்களின் ஓட்டம் நின்று விட்டது. எங்கும் அமைதி. ஒருவன் நடக்கும் சப்தம் கூட நன்கு கேட்கும் நேரம். தன் அரையிலேயே அடைந்து கிடக்க முடியாமல், ஓர் மாதிரி சரீரத்திற்கும் மனதிற்கும் சிறிதாவது சந்துஷ்டி கொடுக்க கொசுவின் காணம் சுற்றுவது காதில் படாதிருக்க, என் நண்பன் திகம்பரன் தன் நாற்காலியினின்றும் சேம்பல் முறித்துக் கொண்டு எழுந்தான். தான் படித்து வந்த புஸ்தகத்தை வெறுப்புடன் மூடி மேஜையின் ஓர் மூலையில் தூக்கி எறிந்தான். பெரு மூச்சு விட்டுக்கொண்டு விளக்கை அணைத்து விட்டு வெளி வந்து சமீபத்திலுள்ள ஓர் காபி கிளப்புக்குச் சென்றான்.

இரவோ நிசப்தமானது. மரத்தில் இலைகள் அசையவில்லை. காற்றென்பதை மருந்துக்குக் கூட காணும். தன் அறையிலிருக்க முடியாமல் காபி கிளப்புக்குச் சென்ற திகம்பரனுக்குக் காபி கிளப்பை விடத் தன் அரையே சிலாக்கியமாகத் தோன்றியது. தாங்க முடியாத எருக்கத்துடன் ஒரு கப் காப்பியும் உள் சென்றதும் அவனுக்கு வியர்வை வடியலாயிற்று. "கஷ்டம்! கஷ்டம்!! எங்கு சென்றாலும் என் கஷ்டம் என்னை விட்டுத் தொலைய வழியில்லை. இவ்வுலகில் இருப்பதை விட இறப்பது மேல்" என்று அவன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். உண்மையில் அவன் நிலைமையை நோக்கினால் அவன் இறக்க விரும்புவது அபுருபமல்ல. ஆஹா! எவ்வளவு காலம் தான் கஷ்டப் படுவான்? எவ்வளவு காலம் தான் பொறுத்துப் பார்ப்பான்? வாழ்க்கையில் முன்னேற்ற மென்பதே அவனுக்கில்லாது போனால் அவன் என்னதான் செய்வான்? ஆனால் புத்திசாலித் தனத்திலும் படிப்பிலும் சற்றும் குறைந்தவனில்லை. இருப்பினும் வாழ்க்கையில் மிருகத்திலும் கேவலமான நிலையிலன்றோ இருக்கிறான். மாடுகள் எப்படித்தன் விருப்பத்திற்குவிரோதமாக வண்டிக்காரனின் சவுக்கடிக்குப் பயந்து, அவனால் இறக்கமின்றி ஏற்றப்படும் அபரிமிதமான மூட்டைகளுடன் கூடிய வண்டிகளை தெரு நெடுக இழுத்துச் செல்லுகின்றனவோ அதுபோல் என் திகம்பரனும் வாழ்க்கை நடத்தும் ஸ்திதியிலிருக்கிறானென்றால், பின் அவன் எண்ணம் சாவையன்றி வேறு எதை நாடும்? "ஆஹா! நானும் என் வயிற்றுப் பிழைப்புக்காக, பத்திரிகா நிருபத் தொழில் என்ற வண்டியை கழுத்தில் கட்டிக் கொண்டு இழுத்துச் செல்கிறேன். அடுக்கடுக் கான மூட்டைகளை ஏற்றிய வண்டியை இழுக்கும்மாட்டின் பாடு மிகவும் உத்தமமே! முடிவற்ற வார்த்தை அடுக்குகளை பேனா முனையில் வைத்து இழுத்துச் செல்லும் என் கதி அதோகதியாயல்லவோ இருக்கிறது. ஹா! என் முப்பதாவது வயது இன்று முடிவடைகிறது. இதற்குள் தலைமுடியும் வெண்மைநிறம் காணத் தொடங்கி விட்டது. நான் கண்ட பலன் என்ன? பால்யத்தை இழந்தேன்! "என்னை இச்சித்த காதலியை மணக்கும் சக்தியற்றவனானேன்!

அதே ஏக்கம் கொண்ட காரணத்தால் அவள் மரிக்க அப்பழிக்கு நான் ஆளானேன்! என் கல்வி யாவும் வியர்த்தமாகியது! அந்தோ! இதுவோ நான் இப்புவியில் பிறந்ததின் பலன்?"

என்று திகம்பரன் தனக்குள் பலவாறு சிந்தித்துக் கொண்டே ஹோட்டலினின்றும் வெளிவந்து நாற் புறமும் சுற்றி நோக்கினன். மூன்று மெத்தை வைத்துக் கட்டிய உன்னத வீட்டொன்றின் மேல் மாடியிலுள்ள ஓர் அறையில் விளக்கு பிரகாசமாய் இருந்ததை அவ்வறையின் ஜன்னல் வழியாய்க் கண்டான். அந்நிசியில், அதுவும் அவ்வேளையில், அத்தெருவில், அந்த ஒரு ஜன்னலில்தான் வெளிச்சத்தைக்காண முடிந்தது. ஏனெனில் மைலேயில் சாதாரணமாக எல்லோரும் சீக்கிரம் படுக்கைக்குச் சென்று விடுவது வழக்கம். அந்நல்லிருளில், அவ்வீட்டில், உயர் மெத்தையில், விளக்கு எரிந்து கொண்டிருந்ததைப் பார்க்க அது ஓர் தீபஸ்தம்பம் போல் தோன்றியது. ஜன்னல் கதவு திறந்திருந்ததேயாயினும் உள் பக்கமாக ஜன்னலை மறைத்து வெள்ளைப் படுதா போடப்பட்டிருந்ததால் அறையின் உள் பக்கத்தைக் காணக் கூடவில்லை.

"இங்கு யார் இருக்கலாம்? இங்கு தன் நேரத்தை இப்பொழுது நிம்மதியாய், இனிமையாய் கழித்துக் கொண்டிருப்பது யார்?" என்று திகம்பரன் எண்ணமிட்டான். அவ்வறையில் இருப்பவன் எவ்வளவு இன்பம் அனுபவிப்பவனாய் இருக்க வேண்டுமெனப் பலவாறு சிந்தனை செய்தான். அவ்வாறு தன்னால் இருக்க முடியவில்லையே யெனத் தன் தலைவிதியை நொந்து கொண்டான். வெகு நேரம்வரை அந்த ஜன்னலை உற்று நோக்கிய வண்ணம் அப்படியே ஸ்தம்பம்போல் நின்றான்.

"அங்கு வசிப்பது யாராகத்தானிருக்க முடியும்? என்னைப்போன்ற பத்திரிகை நிருபரா? அல்லது அரிய புத்தகங்கள் எழுதும் பெரிய பண்டிதரா? இன்றேல் உயர்தர உத்தியோகஸ்தரா? என்று பலவாறு திகம்பரன் சிந்தித்துப் பார்த்தான். ஒன்றும் முடிவு ஏற்படவில்லை. யாராயிருந்தாலும் இந்நேரத்தில் அவர் என்ன செய்து கொண்டிருப்பாரென எண்ணமிட்டான். பெரிய கவியாயின் காவ்யம் செய்து கொண்டிருக்கலாம். அரிய மேதாவியாயின் தாம் எழுதி வரும் புத்தகத்தைப்பற்றி எண்ணமிட்டுக் கொண்டிருக்கலாம். ஓர் கால் அவ்வெண்ணத்தில் அப்படியே ஈசிசேர்ல் (Easy Chair) சாய்ந்தபடி உறங்கியிருந்தால் அதைப்பற்றி இனிமையாகக் கனவுகள் கண்டு கொண்டிருக்கலாம்" என்று பலவாறு திகம்பரன் எண்ணினன்.

"ஓர் கால் புதிதாய் மணந்து கொண்டு சதி பதிகளாயிருக்கலாமோ? என் நிலைமைதான்—நான் காதலியை இழந்து இவ்விதமிருக்கிறேன். ஈசனே! அவர்களாவது இன்பமாய் சுகித்திருக்கட்டும். இல்லை! ஓர்கால் புருஷன் எங்காவது வெளியில் சென்றவன் இன்னும் வராததால் மனைவி கார்த்துக் கொண்டிருக்கிறாளோ? இருக்கலாம்! அப்படியானால்—பாவம்—அவள் புருஷன் வரவை எதிர்பார்த்துக் கொண்டு தூங்காமல் அறையில் அங்குமிங்கும் அலைந்து கொண்டே இருப்பாளல்லவா? பெண்களின் கஷ்டம் புருஷர்களுக்குத் தெரிவதேயில்லை. என்ன தலை போகும் காரியமானாலும் இன்னேரம் வரை வீட்டுக்குத் திரும்பாமலிருப்பது புருஷனுக்கு நியாயமில்லை" என்ற பல பல எண்ணங்கள் பல பல மாதிரி திகம்பரனுக்குத் தோன்றியது.

இந்நிலையில் திடீரென வானம் இடித்து பெரும் மழை பொழியத் தொடங்கியது. திகம்பரனும் இனி தன் அறைக்குச் செல்வதெனத் திரும்பினன். போகும் வழியில் அப்பெரிய வீட்டைக் கடந்தே செல்ல வேண்டும். எனவே அவ்வீட்டின் அருகில் வந்ததும், அவ்வீட்டின் வாசற் படியில் ஒருவன் தனிமையில் உட்கார்ந்திருப்பதைக் கண்டான். அவனைப் பார்த்தால், யார் வரவையோ எதிர் பார்த்துக் கார்த்துக் கொண்டிருப்பது போல் தோன்றி

யது. எங்கும் நிஸ்சப்தமே குடிகொண்டிருந்தது. "ஐயா! உயர மாடியில் விளக்கு எறிகிறதே! அங்கு வசிக்கும் பாக்யசாலி யார்?" என்று திகம்பரன் அம் மனிதனைக் கேட்டான்.

"சார்! அவரையா கேட்கிறீர்கள்: அவர் ஓர் சிறுவர். சமீபத்தில் தான் பி. ஏ. பட்டம் பெற்றவர். வெளியூரிலிருந்து வேலைக்காக இங்கு சென்னைக்கு வந்தார். சென்ற மூன்று வாரமாய் அந்த அறையிலிருக்கிறார். பாவம்! அவர் பரம ஏழை! நான் வாடகை அட்வான்சாய் வேண்டுமென்று கேட்டேன். அப்பொழுது அவர் தன்னுடைய தரித்திர நிலைமையைப் பற்றியும், தன் பெற்றோர்கள் பரம ஏழையாயிருந்து எவ்வளவு இழிவான தொழில் செய்து தன்னைப் படிக்கவைத்தார்கள் என்பதையும் சொல்லக் கேட்ட என் மனம் தாங்காமல் கண்ணால் ஜலம் விட்டேன். அவருக்கு வேலை அகப்படும் வரை இனமாய் அறையைக் கொடுப்பதாகத் தைரியம் சொல்லி அறையையும் கொடுத்தேன். காலை பொழுது விடிந்தது முதல் மாலை அஸ்தமிக்கும் வரை ஊர் முழுதும் ஒவ்வொரு இடமாய் சென்று பார்த்தும்— பாவம் ஏழை, படித்தவர், அவருக்கு வேலையே அகப்படவில்லை. இன்று மாலை—ஹா! என்ன கோரம்!! என்ன கோரம்!!! அவர் மனமுடைந்து தூக்குப் போட்டுத் தற்கொலை புரிந்து கொண்டார். ஒரு மணி நேரத்திற்கு முன்புதான் அவர் இறந்து தொங்கிக் கொண்டிருப்பதை நான் கண்டேன். உடனே அவ்வறையில் விளக்கை ஏற்றி வைத்து விட்டு போலீசுக்குச் சொல்லி அனுப்பினேன். போலீசாரின் வரவை எதிர் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்" என்று அம் மனிதன் சொல்லி முடித்ததும் திகம்பரனுக்கு இடி விழுந்தது போலாயிற்று. பித்தன் போல் அவ்விடத்தினின்றும் தன் வீட்டை நோக்கி ஓடி மறைந்தான்;

இன்னும் திகம்பரன் அதே பத்திரிகை நிருபர் தொழிலில் தான் இருக்கிறான். இன்னமும் அவன் நிலைமையில் சற்றும் மாறுதல் ஏற்படவில்லை. ஆனால் முன்போல் வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்குவதை விட்டொழித்தான். தன்னையும் விடக் கேவலமான நிலையிலிருப்பவர்களை எண்ணித் தன் நிலை உயர்ந்ததெனத் தான் திருப்தியடைந்திருக்கிறான்.

'ராமுலு' புதிய ஸங்கீதங்கள்

ஸங்கீத ஸாஹித்ய பரத சாஸ்திர வித்வான் கெ. வி. ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்களால் அநேக சீர் திருத்தங்களுடன் புதியதாய் தயாரிக்கப் பட்ட அரிய புத்தகங்கள்.

1. ஸங்கீத சிந்தாமணி ரூ. 3.
2. திராவிட கானம் ரூ. 3.
3. ஸங்கீத சில்லறைக் கோர்வை ரூ. 3.

இவ்வரிய புத்தகங்கள் இது வரையிலும் ஸங்கீத உலகத்திற்குத் தெளிவாய்க் கிடைக்காத அநேக விஷயங்களையும், அரிய பெரிய பாட்டுக்களையும் வழங்க வல்ல தென்றால், இப்புத்தகங்கள் ஸங்கீத வித்வான்கட்கும், ஸங்கீதாபிமானிகட்கும், ஸங்கீத உபாத்தியாயர்கட்கும் வித்யார்த்திகட்கும் ஒரு பெரிய நிதியாகுமென்பதை நாங்கள் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை.

புத்தகங்கள் ஒவ்வொன்றும் நல்ல கிளேஸ் கடிதத்தில் சுத்தமாய் அச்சிட்டு, கண் கவரும் படியான அழகான காலிகோ பைண்டு செய்யப் பட்டிருக்கிறது.

முழு விபரத்திற்கு கீழ் விலாசத்திற்கு எழுதவும்:

எம். எஸ். ராமுலு கம்பெனி, புத்தக வியாபாரிகள்.

10 கல்மண்டபம் ரோட், இராயபுரம், மதராஸ்

பொழுது போக்கு.

(நாரதர்)

நாகரீக முதிர்ச்சி.



ராமய்ய தீக்ஷிதர்:—(பயந்து கொண்டு) இன்னிக்கு - தங்கள் அப்பாவுக்கு - சிரார்த்தமாச்சே. ஸ்னானம் செய்யவேண்டாமா?

மாஜிஸ்டிரேட் மணி அய்யர்:—டாம் இட் (Damn it) சிராத்தமும் ஆச்சு கிராத்தமும் ஆச்சு. இப்போ ஒரு என்டர்டெயின்மெண்டு (Entertinment) க்கு அர்ஜெண்டா (Urgent) போரேன். இப்போ முடியாது. ஒம்ம சிராத்தத்தே ஸண்டே (Sunday) அன்னிக்கு ஒத்திப்போட்டுக்கொள்ளும்.

அமுல்!

சாங்கிரஸ் காலத்தில் சென்னை ரஸ்தாக்களில் போலீஸ் அமுலுக்குக் குறைவே யில்லை. வண்டிக்காரர்கள் பாடு திண்டாட்டமாயிற்று. நின்றால் அமுல்! நகர்ந்தால் அமுல்! நடந்தால் அமுல்! ஓடினால் அமுல்! ஆனால் வெளியூர்காரர்களிடம் இது தான் சமயமென்று அநியாயக் காசு பறிக்கும் சென்னை வண்டிக்காரர்களுக்கு இவ்வளவும் வேண்டும்-இதற்கு மேலும் வேண்டும்.

கண்டதும் காதல்.

புருஷன்:—ஆயாடி! உனக்கு என் இன்னம் கண்ணாளம் கட்டல்லே!

ஸ்திரீ:—நீதான் கட்டிக்கோயேன்.

புருஷன்:—ஆனசரி! வா! நம்ப குடிசைக்கு போவோம்.

வார்த்தை மாற்றம்.

குடிகாரன்:— என்னமேன்! எவ்வளவு எவ்வளவு காரத்தில் உம்மிடம் கள் இருக்கிறது.

பலகாரக்கடைக்காரர்:—ஓய்! இது கள்ளுக்கடை இல்லேங்கானும். பலகாரக்கடை.

குடிகாரன்:— மூடத்தனமா பேசாதே-மேன். கண்ணில்லே உனக்கு. போர்டு பாரு-மேன்-கள்ளு கொடு-மேன்.

குறுக்கு வழி.

நாட்டுப்புறத்தான் ஒருவன் தபால்பெட்டியண்டை போய் நின்று கொண்டு வழியில் போன ஒருவரைப் பார்த்து 'இது என்னது' என்று கேட்டான். அவர் அது தபால் பெட்டியென்றும், அதில் காகிதம் போட்டால் விலாசத்தாரிடம் போய் சேருமென்றும் பதில் சொன்னார். பின் நாட்டுப்புறத்தான்-ஏ! ஆண்டே. வெள்ளக்காரன் கெட்டிக்காரன்தான். இதுக்குள்ளே கடலாசு போட்டா எங்கெல்லாமோ போவுதாமே! நாம்பளே போய் உள்ளே குந்திக்கிட்டா நம்ப ஊருக்குப் போயிட மாட்டோமா?

ஜீவஹிம்சையும், மரக்கறிகளும்

நம்மவர்களில் சிலர் மாமிசம் உபயோகிக்கின்றனர்கள். மற்றும் சிலர் மரக்கறிகளை உபயோகிக்கின்றனர்கள். மாமிசம் சாப்பிடுவதினால் மற்ற பிராணிகளுக்கு ஹிம்சை ஏற்படுகின்றன என்பது நமக்கு நன்றாய்த் தெரிந்த விஷயம். அதைப் போலவே மரக் கறிகளை புசிப்பதினால் ஷை செடி கொடி மரங்களுக்கு ஹிம்சை ஏற்படவில்லையா? அதுவும் ஜீவ வதைதானே என்று சிலர் கேட்கலாம். தற்கால சாஸ்திர விற்பன்னர்கள் அசையாப் பொருள்களுக்குக் கூட உணர்ச்சி இருக்கின்றன என்று நிரூபிக்கிறார்கள். ஸ்ரீ போஸ் என்பவர் சமீபத்தில் மரம் செடி கொடிகளுக்குக் கூட உயிர் இருக்கின்றனவென்றும் அவைகளுக்கும் நரம்புகள் இருக்கின்றனவென்றும் நிரூபித்திருக்கிறார். தவிர மிருகங்களைப் போல் செடி கொடிகளுக்கும் பசி, உணர்ச்சி, தூக்கம் கஷ்டம் முதலியவைகளை உண்டு என்று நிரூபித்திருக்கின்றனர். ஆகையால் செடி கொடிகளில் காய்க்கும் காய்கறிகளுக்கும் மிருகங்களின் மாமிசத்திற்கும் ஒற்றுமை இருக்கிறதென்றும் இவைகளில் எதை புசித்தாலும் அது ஜீவ ஹிம்சைதான் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆகையால் ஹிம்சை செய்கிறதில்லை என்று சொல்லி மாமிசம் புசிக்காமல் காய்கறிகளை புசிப்பவர்கள் தாங்கள் ஹிம்சை செய்வதில்லை என்பது எவ்வளவு தூரம் நியாயம், என்பதை கவனிப் போம். உலகில் உயிருள்ள ஜந்துக்களும், தன்னை விடகீழான நிலைமையில் இருப்பதை இயற்கையிலேயே ஒன்று மற்றொன்றினால் ஜீவக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் மனிதனும் தான் ஜீவித்திருக்க வேறு எதையாவது புசித்து ஜீவக்க வேண்டியிருப்பாதல் என் மிருகங்களை அடித்துத் தின்பதைவிட காய்கறிகளைத் தின்று ஜீவனம் செய்ய கூடாது? மனிதர்களை இயற்கையிலேயே காய்கறிகளை தின்று ஜீவிக்கும்படியாகத் தான் ஏற்படுத்தப் படிருக்கிறது. ஆனால் மிருகங்கள் அவ்வாறு அல்ல. ஏனெனில் அவைகள் அதை விட பலக்குறைவாக இருக்கும் மிருகங்களை தின்றுதான் ஜீவிக்க வேண்டியிருக்கிறது. அதற்கு உதவியாக பற்களும் நகங்களும் அமைந்திருக்கின்றன. மனிதர்கள் அவ்வாறு ஜீவிக்கும்படியாக இருக்கவேண்டுமானால் இவர்களுக்கும் அம்மாதிரி கூர்மையான நகங்களும் பற்களும் ஏற்பட்டு இருக்காதா? இவர்கள் தாங்கள் மிருகங்களை புசிக்க வேண்டுமானால் அதற்கு ஆயுதங்களைக் கொண்டு மிருகங்களை வதைத்து புசிக்க வேண்டியிருக்கிறது. இதிலிருந்தே மனிதர்கள் மாமிசத்தை புசித்து ஜீவிக்க வேண்டுமென்று ஏற்படவில்லை. ஆகையால் மாமிசம் தின்பது இயற்கைக்கு விரோதமாயிருக்கிறது.

காய்கறிகளை புசிப்பதினால் தாவரங்கள் ஜாஸ்தி கஷ்டப் படுவதில்லை. ஏனெனில் தாவரங்கள் வெகு சீக்கிரத்தில் பிரிந்துபோகக் கூடியவை. உதாரணமாக நாம் ஒடு பழுத்த மாதுலைப்பழத்தை மரத்தினின்றும் எடுக்காவிட்டால் அது தானகவே விழுந்து மற்ற விடங்களில் அந்த விதைகள் பரவி முளைக்க ஆரம்பிக்கும், அல்லது பறவைகள் தின்றுவிட்டு எச்சமிட அதிலுள்ள வித்துகளின்றும் செடிகள் முளைக்கும். ஆகையால் நாம் அந்த பழத்தை மரத்தினின்றும் எடுக்கா விட்டால் அது கட்டாயம் கீழே விழுந்துதான் தீரவேண்டும். அந்த விதைகள் எப்படியாவது, நெடுகபரவிவிடும். தவிர ஒரு பழத்திலிருந்து கணக்கற்றமரங்களை .உற்பத்தி செய்யலாம், அத்தோடு அவைகள் சீக்கிரத்தில் உற்பர்தியாகும் ஆனல் மிருகங்கள் அவ்வாறு அல்ல. அவைகள் மிகவும் குறையும். ஒரு குட்டி போட அவைகளுக்கு 5, 6. மாதங்கள் குறைந்தது ஆகின்றன. ஒரு மிருகத்தை கொன்றபிறகு அதனால் மறுபடி மிருகங்கள் பரவுவது இல்லை. செடி கொடிகளில் காய்க்கும் பழங்களைபுசித்தபிறகும் அவைகளினின்றும்செடிகள் உற்பத்தியாகின்றன். ஒருசெடியை மற்றொருசெடி.

யிலிருந்து பிரித்த போதிலும் அவை யாதொரு கெடுதலுமின்றி வளர்கின்றது. ஆனல் ஒரு மிருகத்தினிடம் இருந்து அதன்குட்டியைப்பிரித்தால் அது அது படும்துக்கத்தையும் கஷ்டத்தையும் கவனிக்கலாம். எப்பேர்ப்பட்ட கொடிய மிருகங்களும் தன் குட்டியைபிரிக்க இடம் கொடுக்காது. செடி கொடிகள் அவ்வாறு அல்ல. ஒரு செடியிலிருந்து 1000 கணக்கான செடிகளை உற்பத்தி செய்யலாம். அவைகள் அகப்படுவது வெகு சுலபம். ஆனல் ஒரு மிருகத்தினிடமிருந்து வருஷத்துக்கு ஒன்று இரண்டுக்குமேல் விருத்தி செய்வது கடினம். மனிதன் எப்பொழுதும் மாமிசத்திலேயே வசிக்க முடியாது. அப்படி இருந்தால் வெகு சீக்கிரத்தில் சாப்பிடக் கூடிய ஜீவ ஜந்துக்கள் குறைந்துவிடும். ஆனல் ஒவ்வொரு மனிதனும் முற்றும் காய்கறிகளிலேயே வசிக்கலாம். அவைகள் ஒரு நாளும் அகப்படுவது கடினமாயிராது.

இன்னும் பார்ப்போமனல் ஒரு மரத்தினின்றோ, அல்லது செடியிலிருந்தோ ஒரு பாகத்தை எடுத்து விட்டால் அதனல் அவைகள் இறப்பதில்லை. ஏனெனில் அவ்வாறு எடுப்பதினல் அவைகளுக்கு அதிக ஹிம்சை ஏற்படுவதில்லை. இம்மாதிரி ஒரு ஜீவஜந்துவின் ஒருபாகத்தை எடுத்து விட்டால் உடனே இறந்து விடும். இதிலிருந்தே மாமிசம் தின்பதினல் உயிருள்ள ஜிவன்களுக்கு ஹிம்சை ஏற்படுகின்றது என்றும் காய்கறிகளை புசித்தால் மரம் செடி கொடிகளுக்கு அவ்வளவு ஹிம்சை ஏற்படவில்லையென்றும் நன்ருய்த்தெரிந்து கொள்ளலாம்.

ஆகையால் நாம் வீணுக ஜீவன்களை ஹிம்சை செய்து அவைகளைப் புசிப்பதைக்காட்டிலும் காய்கறிகளை புசிப்பது மேலானது. எவ்வளவு புசித்தாலும் அவைகள் குறையாது.

(இது மாமிசம் சாப்பிடுபவர்களைக்கண்டிப்பதாகாது. ஆனல் மரக்கரிகள் உபோயகிப்பவர்களுக்கு தங்கள் ஹிம்சை செய்ய வில்லை என்பதை எடுத்துக் காட்டுவதே யன்றிவேருென்றுமில்லை)

---

80 வருஷ காலமாக உலக பிரசித்திபெற்ற

அசல்

காரம்
மணம்
நிறம்
குணம்
வாடை
உள்ளது

அநேக
மேடல்கள்
நற்காட்சி
பத்திரங்கள்
பெற்றது



ஷண்முகம்
பட்டணம்பொடி

தபால்பெட்டி
140
மதராஸ்.

தபால்பெட்டி
140 ௭
மதராஸ்.

இனாம்! இனாம்!

'C' ரீடர் டைம்பீஸ் இனாம்



உயர்ந்த 18 காரட் ரோல்ட் டாரா லீவர் பாக்கட் வாச்

ஐந்து வருஷம் உத்திரவாதம். டையலில் அச்சிட்டு ஐந்து ரூபாய் விலை யுள்ளதும், பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதுமான ஒரு கடிகாரத்திற்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு எங்களின் 'C' ரிஜிஸ்டர் செய்த டைம்பீஸ் இனாமாகக் கொடுக்கப்படும். சில நாளைக்கு மாத்திரம் ஒரு கடியாரதிற்கு ஆர்டர் செய்தால் ஒரு டைம்பீஸ் இனாமாகக் கொடுக்கப்படும். முந்துத் நண்பர்கட்கு,

கடியாரம் விலை ரூபா 5 தான்.
காப்டன் வாச் கம்பெனி
தாபால் பெட்டி நெ. **265**, மதராஸ்.

பாதி விலை! பாதி விலை!!

ஒரு மாதம்வரையிலும்.

அசல் விலை

ரூபாய்

14



பாதி விலை

ரூபாய்

7

22 காரட் ரோல்ட் கோல்டுகைகெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக்கடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும் பாதி விலை ரூபா 7. ஒவ்வொருகெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பப்படும்.

ஸ்வான் ஹவுஸ்,

தபால் பெட்டி 508, பி. டி. மதராஸ்

கௌரி பானம்ருதம்.

காப்பிக்குப்பதிலாக உபயோகிப்பது. நம் தேசத்து மூலிகைகளின் கிழங்குகள், வித்துகள், புஷ்பங்களால் தயாரிக்கப் பெற்றது. காப்பியைப்போலவே ருசியும் மணமும் உள்ளது. ஒரு முறை உபயோகித்தவர்கள், மேலும் மேலும் உபயோகிக்க விருபுவார்கள்.

இதன் அரிய குணங்கள்.

இரத்தசுத்தி, பித்தசாந்தி, உஷ்ணசாந்தி, உண்டாக்கி மலச்சிக்கலை நீக்கிப் பசிதீபனத்தைக் கொடுக்கும். ஞாபகசக்தி, ஆரோக்கியம், இவைகளை விருத்திசெய்யும். கணைச்சூடு, மூலச்சூடு, பித்த எரிச்சல், வாந்தி, மயக்கம், மேகவெட்டை, நீரிழிவு, இவைகளை நீக்கும். டின் ஒன்றுக்கு விலை அணா 8. டஜன் ஒன்றுக்கு விலை ரூ. 5-12. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

கௌரி சுகாநந்தனி.

கபால ரோகங்களுக்குத் தைலம்.

இந்தச் சுகந்த பரிமளத் தைலத்தைக்கொண்டு ஸ்நானம் செய்து வருவதால் திரிதோஷ பீனிசங்கள், கண், கைகால் இவ்விடங்களிற் காணும் எரிச்சல், நித்ரா பங்கம், மயக்கம், வெட்டை ரோகங்கள், மேக காங்கை, ஞாபகக்குறைவு, கபால நோய்கள், ஜுரத்தால் நேரும் துற்பலம், கொடிய தலைநோய் இவைகள் நீங்கும். கூந்தல் கருத்து வளரும். இத்தைலமானது மூளைக்கு அதிக வேலை கொடுக்கும் வக்கீல்கள், மாணவர்கள், உபாத்தியாயர்கள் முதலியவர்கட்கு அதிக பயனைத் தரக்கூடியது

6 அவுன்ஸ் புட்டி ரூபா 1-4-0

கௌரி தந்த ரட்சணி பற்பொடி.

இந்தப் பற்பொடியைக் கொண்டு தினந்தோறும் பல் துலக்கி வந்தால், பல், ஈர், நாக்கு இவைகளிலுள்ள சகல நோய்களையும் கண்டித்து வாய் நாற்றத்தைப் போக்கி பற்களுக்கு உறுதியையும் முத்தைப்போல் ஒளியையும் தரும்.

டப்பி 1-க்கு அணா 3

விலாசம்:—டாக்டர் வி. ஆர். சுந்தரம்;

ஆயுர்வேத வைத்திய மந்திரம், பைகிராப்ட்ஸ் ரோட்,

இராயப்பேட்டை, சென்னை.

விஸ்கிராஜனின் விளையாட்டுகள்.

மயானவீரன்:—(விஸ்கிராஜனைப்பார்த்து) "எம் மவராஸா! இந்த பூமியும் சாமியும் உள்ளத்தனையும் நீ சிரஞ்சீவியா வாழனும்! சண்டையாத்தா எனக்கு ஒரு கோடி பிணம் கொடுத்தாங்க! பிளியம்மா ஒண்ணரைக் கோடி கொடுத்தாங்க! எங்கப்பா! நீ யப்போ இரண்டு கோடி கொடுத்தியே! என் தொப்பைய ரப்பினியே! ஒரு முத்தங் கொடு."



(2)

(சாராயக்கடையில்) தாஸிப்பெண்:— "துரைகளே! இது என்னுங்கிறீங்க! தேவர்களெல்லாம் அமுது, அமுது என்னு குடிக்கலே! அவுங்க இதுனாலேதானே சிரஞ்சீவியா யிருந்து வந்தாங்க! அந்த அமுது இதுதான்! புச்சா சாப்பிடாத்தினலே நீங்க ஒரே ஒரு பைண்ட் சாப்பிட்டுப் பாருங்க!"



(3)

குடிகாரதனவந்தர் :—" அலோ! என்னு பிரதர்! வாங்கோ! ஸிட்டவுன் ஸார்? இதிலே ஒரு பைண்டு எடுத்துப் பாருங்க ஸார்! இதனுடைய சொகுஜா பலே தமாஷாயிருக்குது ஸார்! அலோ மிஸ்ஸி! கொண்டா ரெண்டு பைண்ட் விஸ்கி!

(4)

தனலால் சேட்:—"எல்லா நகையின் பேரிலும் ரூபாய் நூறுதான் கொடுப்போம். அதுக்கும் ரூபாய் 500-க்கு நோட்டே பாண்டு எழுதிக் கொடுக்கணும்! மாசம் 1-க்கு நூத்துக்கு பத்து ரூபாய் வட்டி; 4-மாச வட்டி இப்போ முதலிலே புடிச்சினுடுவோம்."

(5)

குடிகேடுக்கும் காட்டேரி :— நீ வெகு காளேக்கு குடிச்சிக்கொண்டே சிரஞ்சீவியா யிருக்கணும்! நீ ஒன் சொத்து பெண்டாட்டி பிள்ளே எல்லாத்யையும் வித்தாவது குடிச்சு, என்மனசை குளிரப்பண்ணணும்! ஒன் குடும்பத்தே எங்கிட்ட ஒப்பிச்சுடு.

(6)

குடிகாரத் தனவந்தன் மனைவி;—ஐயா! சாவுக்காரே! இவ்வளவு தான் என் விட்டே இருக்கும் சொத்துக்கள். இத்துடனுவது எங்க எஜமானே வுட்டுடுங்க! உங்ககாலுக்கு பதினுயிரம் கும்பிடு போடரேன்.



(7)

(குடித்துக்கெட்ட தனவந்தனும் அவன் மனைவியும்)

மனைவி:—அம்மணி! பிச்சை யிடுங்க! (பிச்சைக்கொணர்ந்த அம்மணியைப் பார்த்து) ஐயோ! தெய்வமே! குடித்தணம் பண்ணிக்கொண்டு செல்வமாய் வாழ்ந்து வந்த வீட்டிலேயே வந்து பிச்சைகேட்கும் கதியிலா எங்களை அலையவிட்டாய்! ஐயோ! விதியே! குடிச்சுக் கெட்டதினுல் குடும்பத்துடன் பிச்சை வாங்குகிறேம்! அம்மணி!

சிங்கமும் தேனீயும்.

சூர்யன் அஸ்தமித்து இருட்டு எங்கும் சூழ ஆரம்பித்தது. காட்டிலுள்ள கொடிய மிருகங்கள் கூட இருட்டுக்குப் பயந்து, இரை தேடச் செல்வதை விட்டு, புதரினுள்ளிருக்கும் தத்தம் இருப்பிடங்களுக்குத் திரும்பின. மிருகங்கள் ஓசைகளும் கர்ஜனைகளும் ஓய்ந்தன. பறவைகளின் கத்தல்கள் அடங்கின. மரங்களில் தொங்கும் பெரிய தேன் கூடுகளிலுள்ள தேனீக்களின் ரீங்காரம் கூட இல்லாதிருந்தது. அனேகமாய் எல்லா ஜீவ ஜந்துக்களும் அவைகளின் இருப்பிடங்களில் அடங்கி விட்டன.

ஆனால் ஒரு சிறு தேனீமட்டும் ஓர் நாணல் புல்லின் உச்சியில் உட்கார்ந்துகொண்டு காற்றில் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தது. இருப்பினும் அதுவும் கூட சிறகுகளை மடக்கிக்கொண்டு, கண்ணை மூடிக் கொண்டு சிறிது தூக்கத்திலேயே இருந்தது. வர வர இருட்டு அதிகரிக்கவே காடு முழுதும் கும்மிருட்டாகியது. எங்கும் இருளும் நிஸ்சப்தமும் குடி கொண்டது.

இப்படி இருக்கையில் திடீரென்று ஓர் புதருக்குள்ளிருந்து இடி இடித்ததுபோல் உர்—ர்—ர்—ர்—என்று பெரிய சப்தம் கிளம்பியது. உடனே காட்டிலுள்ள மிருகங்களும் பக்ஷிகளும் விழித்துக் கொண்டன. சிறு தூக்கத்திலிருந்த நமது தேனீயுக்கு தூக்கி வாரிப்போட்டது போலாயிற்று. உண்மையில் அது நடுக்கம் கொண்டதென்றே சொல்ல வேண்டும். அது தன் முன் கைகளால் கண்ணைத் துடைத்துக்கொண்டு நாலு பக்கமும் சுற்றிச் சுற்றிக் கவனமாய்ப் பார்த்தது. "யாரது! இப்பொழுது சத்தம் போட்டது" என்று தனக்குள் மெதுவாய் கேட்டுக் கொண்டது.

அவ்வளவு பயங்கரமாய் சத்தமிட்டது என்னவென்று நினைக்கிறீர்கள்? சிங்கம்! ஓர் பெரிய கெம்பீரமான சிங்கம்—காட்டிலுள்ள மற்ற மிருகங்கள் யாவும் தூங்கிக்கொண்டிருக்கையில் இலகுவாய் அவைகளை வேட்டையாட புதரினுள்ளிருந்தும் வெளிக் கிளம்பியது. தன் நீண்ட வாலை ஆகாயத்தில் உயரத்தூக்கி ஆட்டிக்கொண்டும், தன் அகன்ட பாதங்களில் கூர்மையான நகங்களை வெளியே நீட்டிக் கொண்டும் 'உர்—ர்—ர்' என்று கர்ஜித்துக் கொண்டும் வெளியே வந்தது.

சிங்கத்தைப் பார்த்த பிறகு தேனீயுக்குப் பயம் தெளிந்தது. சிங்கத்தை உற்று நோக்கியபடியே உட்கார்ந்திருந்தது. இதனிடையில் சிங்கமும் கெம்பீரமாக தேனீ இருக்குமிடம் வந்துசேர தேனீ "ஏ! நில்லு! அப்படியே நில்லு! என்கண்டபடியெல்லாம் இப்பொழுது கத்திக்கொண்டு திரிகிறாய்?", என்றது.

சிங்கம் திடுக்கிட்டு விட்டது. சற்று பின் வாங்கித் திரும்பிப் பார்த்தது. சிறு தேனீயைப் பார்த்தது 'இதுதானா' என்று அலக்ஷியம் கொண்டது. "நீ! சிறிய அற்பப் பதராகிய நீ! என்னைப் பார்த்து என்னை கேட்கத் துணிந்தாய்?" என்று கோபத்துடன் கர்ஜித்தது.

தேனீயோ சாவதானமாய் "நான் எப்படிக் கேட்கத் துணிந்தேனா! சொல்கிறேன் கேள். இந்தக் காட்டில் எனக்குண்டான உரிமையினால் கேட்கத் துணிந்தேன். என் உரிமையைக் காப்பாற்றுவதில் நான் சற்றும் பின் வாங்கமாட்டேன். காட்டில் உனக்குண்டான இடத்தில் நீ இல்லாமல் இங்கு வந்து இடைஞ்சல் செய்ய உனக்கு என்ன நியாயமுண்டு? " என்றது.

சிங்கத்தின் கண்களிலோ கோபத்தணல் வீசத் தொடங்கியது. இருந்தாலும் சிங்கம் சற்று கோபத்தை அடக்கிக் கொண்டது. பிறரை அடக்க விரு

ம்புகிறவன் முதலில் தன்னை அடக்கிக்கொள்ளக் கூடியவனாயிருக்க வேண்டுமென்பது சிங்கத்திற்குத் தெரியும் போலும்.

"என்ன நியாயமா! நான் இந்தக் காட்டின் அரசன் என்பதை முதலில் நீ தெரிந்துக்கொள். நான் செய்வதெல்லாம் நியாயமே! பிசகென்பது ஒன்றும் என் செய்கையில் கிடையாது! நான் அரசன்! என்னைக் கண்டு காட்டிலுள்ள மிருகங்கள் யாவும் கிடு கிடுவென்று நடுங்குகின்றன! எனக்கு இஷ்டமானதை நான் பேசுவேன்! எனக்கு இஷ்டமானதை நான் புசிப்பேன்! எனக்கு இஷ்டமானதை நான் செய்வேன் எனக்கு இஷ்டமானபடி நான் திரிவேன்! ஏனெனில் நான் அரசன்" என்று சிங்கம் அட்டகாசம் செய்து நின்றது.

"சரிதான்—நீ அரசனென உனக்கு யார் சொன்னது? அதை எனக்கு முதலில் சொல்லு' என்றது தேனீ.

"யார் சொல்ல வேண்டுமென்கிறாய்! காட்டிலுள்ள எல்லாரும் நான் அரசனென ஒப்புக் கொள்கிறார்கள். அதனால்தான் என்னைக் கண்டு எல்லாரும் பயப்படுகிறார்கள்' என்று பதில் கூறியது சிங்கம்.

அதற்குத் தேனீ "அப்படியா! நீ சொல்வது தப்பு. எல்லாரும் உன்னைக் கண்டு பயப்படுகிறார்களென்று இனிமேல் சொல்லிக்கொள்ளாதே! ஏனென்றால் நான் உன்னைக்கண்டு கொஞ்சமும் பயப்படவில்லை. அதுவுமல்லாமல் நான் உன்னை அரசனாகவும் மதிக்கவில்லை'j என்றது.

சிங்கம்— நீ! நீ!! நீ!!! **நீயா** என்னை அரசனல்லவென்கிறாய்

தேனீ—ஆம்! அது மட்டுமல்ல! என்னுடன் யுத்தம் செய்யவும் உன்னை அழைக்கிறேன். நீ என்னை யுத்தத்தில் ஜெயித்தாலல்லாமல் ஒருகாலும் அரசனாக மாட்டாய்!

இதைக் கேட்டதும் சிங்கம் கட கடவென நகைத்தது. ஆஹா! எவ்வளவு பெரிய போர் வீரன் நீ! என்னை யுத்தத்திற்கு அழைக்கிறாய்! சீ! அற்பப் பதரே! இதோ உன்னை காற்றாய் பறக்கடிக்கிறேன் பார்" என்று சிங்கம் தன் இருதாடைகளும் பரங்கிக் காய் போல் ஒப்பும் வரைக் காத்தடைத்து வேகமாய் தேனீயைப் பார்த்து ஊதியது.

தேனீயோ நாணல் பில்லைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டிருந்ததால் காற்றின் வேகம் அதை ஒன்றும் செய்ய முடியவில்லை. அது கல கலவென்று சிரித்துக் கொண்டு ஏளனமாய் சிங்கத்தைப் பார்த்து "அரசரே ஜாக்கிரதை! ஊதும் வேகத்தில் உமது தாடை சிதறிப் போய்விடப் போகிறது" என்று பரிகசித்தது. அத்துடன் நின்றதா? இல்லை! "உன்னால் என்னைக் கொஞ்சமும் நகர்த்தக் கூட முடியாது. இனிமேல் பயந்து கொண்டு என்னுடன் யுத்தம் செய்யாமல் மெதுவாய் நழுவினையோ, உன் பயங்கொள்ளித்தனத்தை இந்தக் காட்டிலுள்ள எல்லா மிருகங்களிடமும் போய் பறையடித்து, விடுவேன்? பின் அவர்கள் என்னையே அரசனாக்கி விடுவார்கள். ஜாக்கிரதை! ஜாக்கிரதை!!" என்றது.

சிங்கமோ இதைக் கேட்டதும் அடங்காக் கோபம் கொண்டது. 'ஒ—ஹோ! அப்படியா சங்கதி! நீ அற்பப் பொருள். உன்னுடன் யுத்தம் செய்வது என் போன்ற வீரனுக்கு அழகல்ல. இருந்தாலும் நீ யுத்தத்திற்கு அழைப்பதால் அப்படியே யுத்தம் நடக்கட்டும்" என்று அமரிக்கையாய் சிங்கம் பதில் சொல்லிற்று.

தேனீ—இதில் ஒரு நிபந்தனை! அதற்கு நீ உட்பட வேண்டும். இந்த யுத்தத்தில் யார் வெற்றியடைகிறாரோ அவர் அரசராவர்.

சிங்கம்—சரி! அப்படியே இருக்கட்டும் நீ! யுத்தத்திற்குத் தயார் தானா!

தேனீ—ஆம்! முற்றிலும் தயார்.

சிங்கம்—சரி! யுத்தத்தைத் தொடங்குவோம்.

உடனே யுத்தம் ஆரம்பமாகியது. சிங்கம் தன் முன் பாதத்தை விரித்து நகங்களை நீட்டிகள்

போல் நீட்டிக் கொண்டு ஒரே பாய்ச்சலாக தேனியின் மீது பாய்ந்தது. தேனீயை ஒரே அடியில் நசுக்கி விடலாம் என்பது சிங்கத்தின் எண்ணம். தேனீயின் சாமர்த்தியம் அதற்குத் தெரியவில்லை. சிங்கம் பாய்ந்தவுடன் தேனீ சட்டென்று அதன் இடத்திலிருந் பறந்து சிங்கத்தின் மூக்குக்குள் நுழைந்து அங்கு போய் உட்கார்ந்து கொண்டு, வடுக்—வடுக், என்று ஓயாது தன் கொடுக்கினால் கொட்டத் தொடங்கியது.

சிங்கம் அலறிப் போய் விட்டது. மூக்கால் மூச்சு விட்டது-தும்பியது-கைகளால் மூக்கில் அறைந்து கொண்டது—சிறு புல் செடிகளை மூக்கிற்குள் செலுத்தி நோண்டியது மூக்கை வைத்து தேய்த்தது-..உருண்டது—புரண்டது—குதித்தது குட்டிக்கரணம் போட்டது ஒன்றும் பலிக்க வில்லை. தேனீ மூக்குக்குள் இருந்து கொண்டு சற்றும் சோம்பலின்றித் தன் வேலையை வெகு துரிதமாய் செய்து கொண்டிருந்தது. சிங்கம் பட்ட அவஸ்தைக்குக் கணக்கில்லை. மூக்கு பலாங்காய் போல் வீங்கி விட்டது. "ஐயோ! ஐயோ! போதும்! போதும்! ஐயோ-என் மூக்கு போகிறதே! தேனீயே! தேனீயே! தயவு செய்! தயவு செய்! என் மூக்கை விடு! நான் தோத்தேன்! நீ ஜெயித்தாய்! நீதான் அரசர்! ஒப்புக் கொள்கிறேன்! ஒப்புக் கொள்கிறேன்! விட்டு விடு! என்னை விட்டு விடு! என்று சிங்கம் கதறி ஓல மிட்டது; அழுதது.

பின் தேனீ சற்று இறக்கம் கொண்டு சிங்கத்தின் மூக்கினின்றும் வெளி வந்தது. சிங்கம்-பாவம் தோல்வியுற்று வாலைப் பின்னங்கால்களுக்குள் சொருகிக் கொண்டு தலையைத் தொங்க விட்டு மெதுவாய் புதருக்குள் சென்று மறைந்தது. பாவம் பெரிய சிங்கம்—சிறிய அற்ப தேனீயால் தோல்வியடைவதென்றால்—வெட்கமில்லையா!

தேனீயுக்கு பரம சந்தோஷம் உடம்பு பூரித்து விட்டது. ஜம் என்று உயரப் பறந்து வட்டமிட்டு விட்டு முன் இருந்த சாணையில் உட்கார்ந்தது. ஆஹா! என்னை விடப் பராக்கிரம சாலியும் உண்டோ! இக்காட்டில். ஓர் சிங்கத்தையன்றோ நான் ஜெயித்து விட்டேன். என் பராக்கிரமம் இப்பொழுது தான் எனக்குத் தெரிகிறது. இதற்கு முன்பே என் பராக்கிரமத்தை நான் அறிந்திருந்தால் எவ்வளவோ காலத்திற்கு முன்பாகவே நான் இக் காட்டுக்கு அரசனாக வந்திருப்பேனே! நான் வெகு தைரியசாலி! பராக்கிரமசாலி! பலவான்! புத்திமான்" என்று தனக்குள்ளேயே புகழ்ந்து கொண்டு மீண்டு ஓர் முறை பறந்து வட்ட மிட்டது.

கொஞ்ச நேரமாச்சு; தேனீயைக் காணும்! ஹா! ஹா! என்ற அவஸ்தைக் குரல் மட்டும் மெதுவாகக் கேட்டது. அப்படி அவஸ்தைப் படுவது யார்? நம் தேனீ ஓர் சிலந்தியின் வலையில் சிக்கிக் கொண்டது. மீள முயற்சிக்கையில் நன்றாகச் சிக்கிக் கொண்டது. ஹா! ஹா! என்ற அவஸ்தைக் குரலுடன் உயிர் விட்டது.

ஓர் பெரிய சிங்கம்
அதை வென்றது எது?
ஓர் தேனீ

பராக்கிரமசாலியான தேனீ அதைச் சிக்க வைத்தது எது? வெகு மெல்லிய இழையுடன் கூடிய சிலந்திக் கூடு! உலகப் போக்கு இப்படியிருக்கிறது.



பாலாஜி அண்டு கோ.,

"சில்க் எம்போரியம், ஸ்ரீ காசி"

நாணயமும் உத்தரவாதமுமுள்ள வர்த்தகாலயம்.

சகலவிதமான பட்டுப்புடவை தினுசுகளும், கம்பளிப்போர்வைகளும் கிடைக்கும். புதிய மாதிரியிலும் ஆர்டருக்கு தயார் செய்தும் கொடுக்கப்படும்.

பட்டு தினுசுகளின் கேட்லாக்குக்கு உடனே எழுதுங்கள்.

பாலாஜி அண்டு கோ., பெனாரஸ் சிட்டி.

Balajee & Co., Benares City.

கலிபோர்னியன் சில்க்

சுத்தவெண்மை நிறம். பார்டர் கம்பிக்கரை, பட்டைக் கரைகள் போட்டது. புதிய ஸ்டாக். தினப்படி நனைக்கலாம். வண்ணானுக்கும் போடலாம். நல்ல பாலீஷாக இருக்கும். 5 முழம்நீளம் . 40 இஞ்சு அகலம். பட்டு 1-க்கு கிரயம் ரூ 3-12-0

தற்கால நாகரீகத்துக்கு தகுந்தபடி குஞ்சம் கட்டி இருக்கிறது.

வி. ருமய்யர் அன் கோ.,

ஸில்க் எக்ஸ்போர்டர்ஸ்,

கும்பகோணம்

குமார கவசம்.

ஓர் மகானால்
விதிப்படி
தயாரிக்கப்
படுவது.



கலியுகத்தின்
பேராச்சரியம்
கைகண்ட
பலன் கொடுக்
கக் கூடியது.

பேய், பிசாசு, சூன்யம், வியாதி

எல்லா வற்றையும் முருகன் அருளால் நீக்கும்

உண்மைக் கவசம்.

உபயோகிக்கும் முன்.

"ஐயோ! தீராத நோயால்
தவிக்கின்றேனே"

உபயோகித்த பின்.

ஆச்சரிய சொஸ்தம்
கவசத்தின் மகிமை.

"பொல்லாத கனவுகள் பெரிதும் வதைக்கிறதே"

ஆனந்தமான தூக்கம். கவசத்தி மேன்மையே மேன்மை.

"எத்தனை தொல்லைகள்!
எவ்வளவு கவலைகள்!!
ஏனோ உலகில் பிறந்தேன்"?

,கவலை நீங்கியது!
கஷ்டம் தொலைந்தது!!
தொல்லைகள் போயிற்று!!!
எல்லாம் குமாரகவசத்
தின் அருள்.



எம். ஏ. பாஸ் செய்து வருஷம் 1 ஆகியும் வேலை கிடைக்காது வேதனைப் படுகின்றேன்.

உயரிய உத்தியோகம் ஒரு கொடியில் கிடைத்தது. கவசத்தின் சக்தியை என்னென்று சொல்வது?

“ஐயோ! நான் பிள்ளையில்லாப் பாவியானேனே. பொன்னும், பொருளும் பெரிதுமிருந்தும் பலன் என்ன? ஈசனே! கண் பாராயோ!!”

புத்திர பாக்கியம், பெரும் பாக்கியம், பெற்றெடுத்தாள். கவசத்தின் பெருமையால் கிடைத்த தனத்திற்குக் குமரனெனப் பெயரிட்டாள்.

ஆயிரக் கணக்கானவர்கள் அணிந்து பலனடைந் திருக்கின்றனர்.

ஓர் முறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

சர்தா கவசம்	ரூ 1—0—0
வெள்ளி ,,	ரூ 1—8—0
தங்கம் ,,	ரூ 7—8—0

குமார பீடம்,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏன்? எப்படி?

ஏன் மணலினால் கயிர் திரிக்க முடியாது?

இது ஒரு நல்ல கேள்வி! ஆம்! உண்மையில் வெறும் மணலினால் ஒன்றும் செய்ய முடியவில்லை தான். ஏன்? தெரியுமா? சாதாரணமாக கெட்டியாயுள்ள எந்த பதார்த்தத்திலும் ஆகர்ஷண சக்தி இருக்கிறது. இந்த சக்தியால்தான் சாமான்கள் ஒன்றுக்கொன்று சேர்ந்து கொள்ளுகின்றன. சுவர் கட்டுவதில் செங்கல்லும் சுண்ணாம்பும் வைத்துக் கட்டுகிறோம். காய்ந்தபிறகு அவற்றைப் பிரிக்க முடிவதில்லை. ஏன்? ஆகர்ஷண சக்தியால் அவை ஒன்றோடொன்று சேர்ந்து விடுகிறது. அவ்விதமான சக்தி மணலுக்கு இல்லை. அதனால்தான் மணல் ஒன்றுபடாமல் தனித்தனியாய் இருக்கிறது.

எப்படி எழுத்துக்கள் உண்டாயின?

முதன் முதல் யார், எப்படி, எல்லா எழுத்துக்களையும் கண்டு பிடித்தார்கள் என்று எவராலும் சொல்ல முடியாது. ஏனென்றால் எழுத்துக்கள் அந்தமாதிரி ஒரு சமயத்தில் திடீரென வெளிவந்ததாகச் சொல்ல முடியவில்லை. முதன் முதல், அதாவது ஆதியில் ஜனங்கள் பரம்பரையாகப் பல விஷயங்களைச் சொல்லக்கேட்டு மனப்பாடம் செய்து வந்தார்கள். பின் விஷயங்களைப் படங்களாக எழுதி வைத்துவந்தார்கள். அதன்பின் தோன்றிய மேதாவிகள் கொஞ்சம் கொஞ்சமாகப் படங்களிலுள்ள வேலைப்பாடுகளைக் குறைத்துக், குறைத்துக் கடைசியில் பலவித சப்தங்களுக்கு இப்பொழுதுள்ளபடி பலவித எழுத்துகளாக மாற்றிவிட்டனர்.

ஏன் நாம் தும்புகிறோம்?

தேக சுகத்திற்கு கேடு விளைவிக்கும் பொருள் உடலில் எங்கு இருந்தாலும், அதை வெளிப்படுத்த உடலின் அவயவங்கள் பல வேலை செய்யும். இது இயற்கை. இதன்படி அந்நிய பொருள் ஏதாவது மூக்கிலிருந்தால் அதை வெளிப்படுத்த தும்மல் உண்டாவது சகஜம். நாம் உயிருடன் வசிப்பதற்கு காற்று மிகவும் அவசியமானது. இந்தக் காற்று உடலுக்குள் போய்வர முக்கிய வழியாகவிருப்பது மூக்கேயாகையால், இதற்குள் ஏதாவது அன்னிய பொருள் சென்றுவிட்டால், அதை வெளிப்படுத்த வேகமாய் மூச்சுவிடும்படி மூளை ஆக்ஞாபிக்கிறது. அதன்படி ஒரே சமயத்தில் வேகமாக வெளியிடப்படும் மூச்சையே நாம் தும்பலென்கிறோம்.

ஏன் கொட்டாவி விடுகிறோம்?

நாம் எப்பொழுது கொட்டாவி விடுகிறோம்? மிகவும் களைப்பு மேலிட்டு, தூக்கம் வரும் சமயத்தில் கொட்டாவி விடுகிறோம். தூக்கம் என்பது உடம்பின் பல அவயவங்களும் சிரமப்பரிகாரம் செய்து கொள்வதாகும். களைப்பு அதிகமாகி தூக்கம் வரும் சமயத்தில், உடம்பின் அவயவங்கள் யாவும் அதனதன் வேலைகளைக் குறைவாகவே செய்கின்றன. அந்தசமயத்தில் காற்றுப்பையும் வேகமாய் சுவாசிக்க வேலைசெய்வதில்லை. ஆகவே அப்பொழுது அளவுக்கு மிஞ்சிக் காற்று தங்க உடல் இடம் கொடுக்காதகையால், அதிகப்படியான காற்றை 'ஆ' என்று வாயைத்திறந்து வெளியே செலுத்துகிறோம். அவ்விதம் வாயைத்திறந்து காற்றை வெளி விடுவதுதான் கொட்டாவி எனப்படுகிறது.

ஏன் புருவம் வேண்டும்?

இது மிகவும் இலகுவான கேள்வி. இதற்குச் சரியான பதில் எல்லாருக்கும் எளிதில் தெரிந்திருக்க வேண்டுமாயினும். நேரில் கேட்கப் போனால் அநேகமாய் பலருக்குத் தெரியாமலே இருக்கும். நமது கண்களுக்கு மேலாகப் புருவங்கள் இருக்க வேண்டியதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அதனாலுண்டான உபயோகம், மற்றொன்று

அதனால் முகத்திற்கு ஏற்படும் அழகு. முதல் காரணத்தை எடுத்துக் கொள்வோம். கண் நெற்றியின் அடியில் பள்ளத்திலிருக்கிறது. அதிக வேலை செய்தாலும், அல்லது அதிக உஷ்ணம் கொண்டாலும் நெற்றி முழுதும் வியர்வை வடிகிறதல்லவா? புருவம் இல்லாவிடில் அவ்வியர்வை யாவும் கண்ணுக்குள் வடிந்து கண்ணைக் கெடுத்து விடும் புருவமானது வியர்வை கண்ணில் வடியா வண்ணம் தடுத்து, அதைக் கண்ணுக்கு இருபக்கத்திலும் சென்று வடியும் படிச் செய்கிறது இதைவிட கண்ணைக் காக்கக் கூடிய உபயோகம் வேறு என்ன வேண்டும்?

ஏன் மீன் பூமியில் வசிக்காது?

இந்தக் கேள்வி மிகவும் வேடிக்கையானது. உயிருள்ள ஜந்துக்கள் எல்லாவற்றிற்கும் காற்று மிகவும் அவசியமாகும். காற்றில்லாவிடில் எந்தப் பிராணியும் உயிருடனிருக்காது. நாம் தண்ணீருக்குள் அமுக்கப்படுவோமானால் அங்கு போதுமான காற்று இல்லாததால் மூச்சு முட்டிப்போய் நாம் இறந்து விடுவோம். பூமியோ அவ்வாறு இல்லை வேண்டிய காற்று தாராளமாய் இருக்கிறது. அப்படியிருக்கையில் ஏன் மீன் பூமியில் உயிருடனில்லாமல் இறந்து விடுகிறதென்பதுதான் ஆச்சரியமான விஷயம். காற்றை உட்கொண்டு வெளிவிடுவதென்பதே மூச்சு விடுவது எனப்படுகிறது. அவ்விதம் மூச்சுவிட நம் உடலுக்குள் காற்றுப்பையொன்று அமைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் மீனுக்கோ அவ்விதமான காற்றுப்பையொன்றும் கிடையாது. ஜலத்துடன் கலந்து நிற்கும் காற்றைப் பிரித்து உட்கொள்ளத்தக்க ஓர் அவயவம், காற்றுப்பையுக்குப் பதிலாக அதன் உடலில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனால் நேராகக் காற்றை சுவாசிக்க முடியாது. ஆகையால் ஜலத்தைவிட்டு வெளிவந்ததும் காற்றை சுவாசிக்க முடியாமல் இறந்து விடுகிறது. நாம் ஜலத்துக்குள் முழுகினால் ஜலத்திலிருந்து காற்றைப் பிரித்து உட்கொள்ள முடியாததால் மூச்சு முட்டி இறந்து விடுகிறோம்.

உலகம் சுற்றும்பொழுது ஏன் நாம் விழாமலிருக்கிறோம்?

நாம் பூமியிலிருந்து ஒரு பொழுதும் விழுந்து விடமாட்டோம். ஏனென்றால் பூமிக்கு ஓர்வித சக்தி இருக்கிறது. அந்த சக்தியால் நம்மை பூமியினின்றும் விழாதபடிக்கு இழுத்து பிடித்துக்கொண்டிருக்கிறது. உலகமோ மிகப்பெரிது. அதன் சக்தியோ அபாரமானது. நாம் அதன் சக்தியினின்றும் விடுபட வேண்டும் அதைவிடப் பெரிய சக்தியை உபயோகித்தாலன்றி முடியாது. அந்த சக்தியின் பலத்தால்தான் நாம் உலகத்துடன் சேர்த்திருக்கிறோம்.

உலகத்தினின்றும் விழுந்து விட்டால் நம் கேதி என்ன?

உலகத்தினின்றும் நாம்விழுவதென்றால் முதலில் உலகத்திற்கு நம்மைப் பிடித்து இழுத்துக்கொள்ளும் சக்திபோய்விட்டதாக வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உலகத்திலிருந்து நம்மால் விழ முடியும். அவ்விதம் உலகத்துக்கு சக்தி போய்விட்டால் நீ வீட்டிற்குள்ளிருந்து மேலே எழும்பிக் குதிப்பாயானால், மீண்டும் தரைக்கு வந்து சேர மாட்டாய். வீட்டின் கூரையில் போய் முட்டிக் கொண்டு மேலே போக முடியாமல் அங்கேயே தொங்கிக் கொண்டிருப்பாய். ஏனென்றால் பூமிக்கு உன்னை இழுக்கும் சக்தி இல்லாததால் நீ கீழே வரக் காரணமில்லை. வீட்டிற்குள் அல்லாமல் வெளியில் வந்து நீ எழும்பிக் குதித்தால் கீழே வராமல் ஆகாயத்தில் மேலே, மேலே போய்க் கொண்டிருப்பாய். வரவர காற்றின் பலம் உனது போக்கைத் தடுப்பதால் ஆகாயத்தில் வெகுதூரம் மேலே போனதும், கீழேயும் இறங்க முடியாமல், அதற்கு மேலேயும் போக முடியாமல் அங்கேயே நடுவில் தங்க வேண்டியதாகிவிடும். அங்கே குளிர் தாங்க முடியாமல் அவஸ்தைப் படுவாய். பூமிக்கு உன்னை இழுக்கும் சக்தி இல்லாததைப்போல காற்றுக்கும் உன் போக்கைத் தடுக்கும் சக்தி இல்லையென்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் நீ மேலே

போய்க்கொண்டேயிருப்பாய்; முடிவே இருக்காது. நேர் உயர வேறு எதாவது ஒரு கிரகம் (Planet) குறுக்கிட்டால், அப்பொழுது நல்ல வேளையாய் உன் பிரயாணம் முடிவடையும். நீ அதில் போய் முட்டிக் கொண்டு மேலே போகமுடியாமல் நின்று விடுவாய்.

ஆனால் நீ போகும் வேகத்துடன், அந்த கிரஹத்திற்கு உன்னை இழுத்துக் கொள்ளும் வேகமும் சேர்ந்து விட்டாலோ உன் கதி அதோ கதிதான். முட்டிக்கொள்ளும் வேகத்தில் நீ தூள் தூளாகப் போய் இறக்க வேண்டியதுதான்.

தந்தி விலாசம்
R ASAM Co

சேட்லாக்
இறய்!

மின்சார ரசம்

உள்ளுக்கும் மேலுக்கும்
உபயோகிக்கலாம்.

இதற்கு ஒருவித
மின்சார
சக்தியுண்டு
பத்தியமில்லை
அநுமான
மில்லை

மின்சார ரசம்.

மனிதர்
களுக்கு வரும்
சகல வியாதிகளுக்
கும் தேவாமிர்தம் போ
ன்றதென ஜகத் பிரசித்தி
பெற்றது.

அற்புதமான சிகிச்சை!

ஆச்சரியகரமான குணம்!

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள்
பெற்றது.

புட்டி 1-க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.
மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம்.

போட்டோபடம்

பெரிதாக்கப்படும்.

உங்கள் சிறிய போட்டோபடங்கள்

பெரிய அளவுக்குப் பெரிதாக்கப்படும்

Bromide Enlargement

(Bust)

அழகிய அமைப்பு

உயர்ந்த வேலைப்பாடு

சிறந்த அமரிக்கன் முறைப்படி

தயாரிக்கப்படுவது.

அழகிய பார்டர் அட்டையுள்பட அளவு 15 × 12

ரூபாய் 5

உடனே உங்கள் போட்டோவை அனுப்புங்கள்.

சர்மா சகோதரர்,

வேப்பேரி, சென்னை.

நீதிஸ்தல விரயம்.

௧



கோவிந்தன்—: அடே சாம்பசிவா! என் சுவற்றுக் கொண்டிக்கல்லில் நீ எப்படிக் கூறை போட்டுக் கொள்ளலாம் உன்னை விட்டோனாபார்.



2

கோவிந்தன்:—(லாயரிடம் சென்று அந்தப் பயல் சாம்பசிவன் என்வீட்டுக் கொண்டிக்கல்லின் மேல் கூறைபோட்டிருக்கான். பிரித்துவிடச் சொன்னால் பிரிக்க மாட்டே னென்கிறான். அந்தப் பயலை ஸிவில் கிரிமினல் ரெண்டு கோர்ட்டிலும் இழுத்து சந்தியிலேயே நிறுத்தாட்டா என்மானம் போயிடும். என்ன வேணு மானாலும் பீஸ்தாரேன். நீங்கதான் உபகாரம் செய்யணும்.

3

கோவிந்தன்:—செட்டியார்வாள் பலத்தகேஸ் நடக்க வேண்டிருக்கு ரூ 2000-க்குக் குறையாமல் செலவாகும். கள்ளன் கையிலே கொடுத்தாலும் என்விடு ரூ 3000-க்கு மேலே பொறும். என்வீட்டு மேலே 2000 ரூபாய் கொடுங்கோ என்னவட்டி வேணுமானாலும் போட்டுக்கோங்க. என் கேஸ் ஜெயித்தால் போதும்.

செட்டியார்:—100-க்கு 25-க்குக் குறைந்த வட்டி நம்மண்டை கிடையாது. அதுவும் உமக்காக.



4

கோர்ட்டில் கோவிந்தனுக்கு சாதகமாகத் தீர்மானம் செய்யப்படவே சாம்பசிவன் அதன்மேல் அப்பீல் செய்ய வக்கீல்லிடம் யோசிக்கிறான்.

சாம்பசிவன்:—லட்ச ரூபாய் செலவானாலும் சரிதான். அப்பீலிலே இதை ஒருகை பார்த்துதான் விடணும்.

வக்கீல்:—இந்த கேஸில் ஒன்றுமேயில்லை. ஜட்ஜு முதலிலேயே பிரஜடிஸ் ஆயுட்டான். அப்பீலில் கண்டிப்பாய் உனக்குத்தான் ஜெயம்.



5

சாம்பசிவன் கோவிந்தன் இருவரும் வழக்காட வாங்கிய கடன் துகைக்காகத் தங்கள் வீடுகளை கோர்ட்டு ஏலத்தில் விட்டுவிட பின்னும் துகை போதாமல் வீட்டு சட்டிப் பானைகளை ஜப்திசெய்கிறார்கள்.

6

கோவிந்தனும் சர்ம்பசிவனும் சுவர் கொண்டி வழக்கில் சொத்துக்களை யிழந்து பிழைக்க வழியின்றி தென் ஆப்பிரிக்கா தோட்டக் காடுகளுக்குச்சென்று குடும்பத்துடன் கூலிவேலை செய்தல் காண்க.

நியூ ஸில்க் அங்கவஸ்திரம்

மின்னுவதெல்லாம் வெளிச்சமல்ல. வெளுத்ததெல்லாம் பாலல்ல. பட்டென்ருல் எல்லாம் பட்டல்ல. எங்களின் கலிபோர்னியா New ஸில்கு அங்கவஸ்திரம் சுத்த வெண்மை நிரம். பார்டர் கட்டியது. குஞ்சம்கட்டி அழகாயிருக்கிறது. எங்கள் பெயர் பிரபலியமாகும் பொருட்டும் தற்காலம் பட்டு விலை குறைந்திருப்பதை உத்தேசித்தும் விலையைகுறைத்திருக்கிரேம். 5×40 1 க்கு கிரயம் ரூ3-12-0

கேட்லாக் இனம்

வி. ருமய்யர் அன் கோ.,

சில்க் ஹவுஸ்,

கும்பகோணம்.

சி வா ஜி.

சிறந்த இனிய தமிழ் புத்தகம். சிவாஜி மகாராஜாவின் சரித்திரமும், அவரது வீரச்செயல்களும் வெகு அருமையாய் எழுதப்பட்டுள்ளது.

தகுந்த சரித்திர ஆராய்ச்சியைத் தழுவியது.

படிக்கப்படிக்க இனிமையாய் நாவல் போலிருக்கும்.

புத்தகம் 1க்கு அணா 12.

விலாசம்:—

சென்சரி டிரேடிங் கம்பெனி.

பிலிப்ஸ் ஸ்டிரீட், ஜி. டி., சென்னை.

டபார்கானும் படார்சாமியும்

(குட்டிக் கதைகள்)

3



எனக்கு உடம்புக்கு நன்றாயில்லை நான் இறந்து விட்டால் ??
நீர் இறந்துபோனால் சொர்க்கலோகத் துக்குப் போவீர்
அங்கு சகல செல்வமும் சகல போகமும் உண்டாம்..
சொர்க்கலோகம் அவ்வாறு செழிப்புள்ளதென்று நான் நம்பவில்லை
ஏன் ?
அப்படியிருந்தால் இங்கிலீஷார் இன்னும் அதன்மேல் படை எடுக்காமல் இருப்பார்களோ ?

4

கல் வியாபாரம் செய்து பிழைப்போமா?
டபார்கான் அண்டு கம்பெனி
கல் வியாபாரிகள்
மோதிரத்துக்கு ஏற்ற கல் இருக்கிறதா?
கொஞ்சம் பெரிய கல் இருக்கிறது
எங்கே பார்க்கலாம்
இதோ
! ! !
ஜோதி

2


மகமதியன் வேஷம் போட்டுக் கொண்டு போய் டபார்காரனை
ஏமாற்றப் போகிறேன்
படார்சாமி வரும் நேரமாயிற்று அதற்குள் இந்தத் தடிக்கு வேஷம் போட்டு விட வேண்டும்
இது ஏது பூதம்
ஜோதி

5

நாளை
விட்டேன்
பரூக்காய் இருக்கிறது.
ஐயே நீ உள்ளே இருந்து கொள்
நாளைக்கு இப்ப விட்டால் தான் உம்மை படம் பிடிப்பேன்
அனல் சரி

6


ஏது டபார்கானே
இன்னும் காணோம்!
வாரும்
உட்காரும்
ஐயோ
குடையை என் கையில் கொடுத்து விட்டு நீர் அங்கிருந்து தூரத்திருல் நாயை பிடித்து தருகிறேன்
நாய் பிடிபட்டுக் கொண்டது. தூரத்தினது போதும். இங்கு வாரும். நாய்க்கு நீர் நினைத்த சிக்ஷை செய்வோம்.


இதோ.
பேஷ்! அப்படித்
தான் கடிக்க
வேண்டும்
தாடி முழுவதும்
பசை ஒட்டிக்
கொண்
டதே!
அதை உத்தேசித்தே
பஞ்சு கொண்டு வந்து
இருக்கிறேன்.
துடைத்துக்
கொள்ளும்
பேஷ்! நன்றாய்
துடைத்து
விட்டீர்

8

ஒரு பாட்டு பாடும், கேட்போம்
ஸா-நிஸதநி பாமப-காமா பாதநிபா—
தநிஸரி-ஸநி தபதநி ஸா;;- ஸாஸதபம—
போதும்
நான் கேட்பதற்காக உம்மை பாடச் சொல்லவில்லை
அடுத்த வீட்டுக்காரனுக்கும் எனக்கும் சண்டை அவனை வீட்டை விட்டுத் துரத்தவே உம்மை பாடச்சொன்னேன்

கிளிக்குப் படிப்பு.

முன்னுரை

ஒரே ஒரு காலத்தில் ஒரு பறவையிருந்தது. அது பரமசாது. வெகு இனிமையாகப் பாடும் ஆனல் பகவத் கீர்த்தனங்கள் ஒன்றும் அதற்கு பாடத் தெரியாது. அது தாவித் தாவிக் குதித்து ஓடுவது வெகு அழகாயிருக்குமானலும் அது இங்கிதம் என்பது இன்னதென்று கூட அறிந்திருக்கவில்லை.

"அறியாமை யென்பது மிகவும் கெட்டது காலம் போகப் போக அது மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கக் கூடியது. அறிவில்லா மூடர்களால் பிரயோஜனம் ஒன்றுமில்லாவிட்டாலும் அவர்களது உணவில் குறைவுகிடையாது. எனவே அறிவிலிகளால் வரும்படியில்லாமல் செலவுதான் அதிகம்" என்று அவ்வூர் அரசர் ஓர் நாள் எண்ணலானர்.

அவர் தமது மருமகனர்களை ஓர் நாள் ஒன்று கூட்டிப் பறவைக்கு நல்ல படிப்பு அளிக்க வேண்டுமெனத் திட்டமாய்க் கூறினர்.

உடனே பெரிய பண்டிதர்கள் வரவழைக்கப்பட்டனர். இவ்விஷயம் வெகு தீவிரமாக யோசிக்கப்பட்டது. பறவைக்குள்ள அறிவின்மை அதனுடைய கேவலமான வாழ்க்கையாலென அம்மேதாவிகள் நிச்சயித்தனர். ஆகவே பண்டிதர்களின் யோசனையின் படி முதலில் பறவையின் படிப்பக் கேற்ற கூண்டு செய்ய வேண்டுமெனத் தீர்மான மாயிற்று

பண்டிதர்களும் தகுந்த சன்மானம் பெற்றுச் சந்தோஷமாய் வீடு சென்றனர்.



தங்கக் கூண்டு

கண்ணைக் நவரும் அழகிய அபூர்வ வேலைப் பாடுகளுடன் தங்கக் கூண்டும் தாயாரானது. இந்தக் கூண்டின் விமரிசையைப் பார்க்க உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் ஜனங்கள் திரள் திரளாய் வந்து சென்றனர். "கல்வி கூண்டில் அடைபட்டதே" எனச் சிலர் கூறிக் கண்ணீர் விட்டுச் சென்றனர். மற்றும் சிலர் "நல்வி சென்று விட்டாலும், கடைசிவரையில் கூண்டாவது மிஞ்சும். ஓர் விஷயத்தில் இந்தப் பறவை அதிர்ஷ்டசாலிதான்" என்றனர்.

தட்டான் பை நிறையப் பணம்சம்பாதித்துக்கொண்டு உடனே கப்பலேறித் தன்னூருக்குப்போய் விட்டான்.

கல்வி

பின் பறவைக்குக் கல்வி புகட்டப் பண்டிதர் வந்து உட்கார்ந்தார். தம்முடைய முறைப்படிக்குண்டான படிப்புக்குப் புஸ்தகங்கள் அதிகம் தேவையிருக்காது என்று சொல்லிக் கொண்டே ஒரு சிட்டிகை பொடியெடுத்து இழுத்தார். இதனிடையில் அரசரின் மருமகன்மார்கள் பெருங் கூட்டமான குமாஸ்தாக்களுடன் அங்கு வந்து சேர்ந்தார்கள். அந்த குமாஸ்தாக்கள் யாவரும் புஸ்தகத்திலிருந்து எட்டிலெழுதினர், எட்டிலிருந்து எட்டிலெழுதினர், எட்டிலிருந்து எட்டிலெழுதினர். இவ்விதமாக எழுதி, எழுதி மலையாகக் குவித்து வந்தார்கள். இப்புஸ்தக மலையைக் கண்டு ஜனங்கள் பிரமித்தனர் "கல்விக் குன்று. ஆஹா! ஆஹா! எவ்வளவு உயரம்! உச்சி ஆகாயத்தில் மறைந்திருக்கிறதே" என்றனர் யாவரும்,

குமாஸ்தாக்களும் பணம் நிறையப் பெற்றுச் சந்தோஷமாய் இல்லம் போயினர்.



அரசரின் மருமகன் மார்களோ கூண்டைமெருகிட்டுப் பளபளப்பாய் வைப்பதில் மிகுந்த சிரத்தை செலுத்தி வந்தனர். இதெல்லாம் பார்த்த பொதுஜனங்கள் "உண்மையில் இதெல்லாம் முன்னேற்றமே" எனத் திருப்தியடைந்தனர்.

குற்றமும் குறைவும்

நாட்டில் எவ்வளவு குறைவுகளிருந்தாலும் கட்டின வீட்டுக்குப் பழுது சொல்லும் சிகாமணிகளுக்குமட்டும் எந்நாட்டிலும் குறைவு கிடையாது. அதில் சிலர் இந்தப் புதிய இலாகா சம்பந்தப்பட்டவரையில் கல்வி கற்கவிருக்கும் பறவையைத் தவிர மற்றவர்களெல்லாரும் கொழுத்து வருகின்றனரெனத் தூற்றிச் சென்றனர்.

இவ்விஷயம் ராஜனின் காதுக்கு எட்டியதும் அவர் தமது மருமகன்மார்களை அழைத்து "என் அருமைச் சிறுவர்களே! இந்தப் புகாருக்குக் காரணமென்ன" என்று கேட்டார்:

அரசே! வேலைகள் எவ்வளவு சிரத்தையாய் நடைபெற்று வருகின்றதென்பதற்கு தட்டார்கள், பண்டிதர்கள், குமாஸ்தாக்கள் முதலியவர்களை விசாரித்தால் தெரியும். வேலையில்லாச் சோம்பேறிகள் சாப்பாட்டுக்கு வழியில்லாமல் நாக்கு நீண்டு கண்டபடி பிதற்றுகிறார்கள்" என்று மருமகன்மார்கள் பதிலளித்தனர்.

இந்தப் பதில் அரசருக்கு மிகுந்த திருப்தியைக் கொடுக்கவே அவர் தம் மருமகன்மார்களின் சாமர்த்தியத்தை மெச்சி ஒவ்வொருவருக்கும் விலையுயர்ந்த ஆபரணங்கள் சன்மானமளித்தனர்.

அரசரின் பேட்டி

சிறிய பறவைக்காக ஏற்படுத்தப்பட்ட பெரிய கல்வி இலாகா எப்படி வேலை செய்து வருகிறதென் பதை நாம் நேரில் கண்டறிய அரசர் விருப்பம் கொண்டார். எனவே ஓர் தினம் திடீரெனக் கல்வி மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்.

மண்டப வாசலில் சங்க நாதமும், கொட்டு முரசுகளும், மேளவாத்தியங்களும் இன்னும் பல வித வாத்தியங்களும் காது செவிடுபட முழங்கின. பண்டிதர்கள் தங்கள் சக்திக் கெட்டும் வரை கூச்சலிட்டு வேதகோஷம் செய்தனர். குமாஸ்தாக்கள், கல்வி உத்தியோகஸ்தர்கள், முதலிய பலரும் அரசரைச் சுற்றி நின்று வாழ்த்துப் பாக்கள் பாடினர்.

மருமகன்மார்கள் அரசரை நோக்கி "அரசே! ஏற்பாடுகளெல்லாம் எப்படியிருக்கிறதென்று பார்த்தீர்களா? என்று பின் சிரிப்புடன் கேட்டனர்.

அரசரும் ஆனந்தத்துடன் கல்வி இலாகா ஏற்பாடுகளைப் பற்றிப் புகழ்ந்து பேசினர்.

மிகுந்த சந்தோஷத்துடன் அரசர் தன் யானை மீது ஏறி அரண்மனைக்குச் செல்லப் புறப்பட்டார். அச்சமயத்தில் கோழ் சொல்லி ஒருவன் கூட்டத்தின் இடையில் இருந்துகொண்டு "அரசர் பறவையைப் பார்த்தாரோ?" என்று அரசருக்குக் கேட்கும்படிக் கூவினன்.

"ஆஹா அதை முற்றிலும் மறந்தேனே" என்றார் அரசர். பண்டிதர்களை நோக்கிப் பறவையின் கல்விக்காக அவர்கள் கையாண்டு வரும் முறைகளைப் பற்றி வினவினர். யாவும் அரசருக்குக் காட்டப் பட்டது. அரசர் பூர்ண திருப்தியும் பரமானந்தமும் கொண்டார். ஏற்பாடுகளின் ஆடம்பரங்களைக் கருதினால் அவ்வளவையும் கற்கவிருக்கும் பறவை மலைமுன் சிறு துரும்பாய்த் தோன்றும். ஏற்பாடுகளில் யாதும் குறையில்லையென அரசர் மகிழ்ச்சி கொண்டார். இனி யாராவது குறை சொல்லவேண்டுமென்றாலோ பறவைதான் சொல்ல வேண்டும். அதுவோ ஒன்றும் குறை சொல்லவில்லை. அதனால் முடியவும் முடியாது. பறவையின் தொண்டைவரைப் பண்டிதர்கள் அடைத்துள்ள ஏடுகளினால், அதனால் வாய் திறந்து கத்தவும் கூடவில்லை, பறவையின் கல்வியபிவிருத்தி முறையைக் காணுவோருக்கு உடல் நடுங்கும்.

அரசர் திருப்தியுடன் அரண்மனை செல்லும் பொழுது குறைகூறிய கோழ் சொல்லியின் இரண்டு காதுகளையும் பிடித்து நன்றாக முறுக்கும்படி அரண்மனைச் சிப்பாய்களுக்கு உத்தரவிட்டுச் சென்றார்.

பறவையின் வாழ்கை.

இவ்விதம் பறவை கொஞ்சம் கொஞ்சமாகத் தன் காலத்தைத் தள்ளி வந்தது. அதுவரை அதன் முற்போக்கைக் கண்டு இலாகாதார் திருப்தி கொண்டனர். என்ன இருந்தாலும் இயற்கைக் குணம், இப்பயிற்சி முறைகளால் மாறி விடுமா? எனவே காலைச்சூரிய வெளிச்சம் கூட்டுக்குள் பட்டதும் பறவை தனது இரக்கைகளை படபடவென்று அடித்து வந்தது. சில சமயத்தில் கூண்டின் கம்பிகளைத் தன் அலகால் அசைத்துப் பிடுங்கவும் முயற்சித்து வந்தது.

"இதற்குச் சற்றும் மரியாதை தெரியவில்லை" என்று கொத்தவால் கடிந்து கொண்டார்.

உடனே அரசரின் கல்வி இலாகாவில் இரும்பு வேலைக்கு ஓர் ஆள் நியமிக்கப் பட்டது. அவன் தன் பட்டறையைத் திறந்து கொண்டான். அப்பப்பா! காது பொறுக்காத செம்மட்டியடி! சீக்கிரமாக பெரிய விலங்கொன்றும் செய்து முடிக்கப் பட்டது. பறவையின் கால்கள் இரண்டும் சேர்த்து விலங்கிடவும் பட்டன.

அரசரின் மைத்துனர் வந்து பார்வையிட்டார். "இப்பறவைகளுக்குக் கொஞ்சம் கூட மூளை கிடையாது! அத்துடன் நன்றியறிதலுமில்லை" என்று முணுமுணுத்துக் கொண்டே சென்றார்.

பின் பண்டிதர்கள் ஓர் கையில் புத்தகமும் மற்றோர் கையில் பிரம்புமாக வந்து சேர்ந்தனர். முறைப்படி பாடங்களைக் கற்பித்தனர்.

பறவையின் மரியாதையற்ற நடத்தையைக் கூர்மையாய் கவனித்த கொத்தவாலுக்குப் பட்டமும் கிடைத்தது. விலங்கின் வேலைப்பாட்டிற்காக இரும்பு வேலைக்காரனும் பட்டம் பெற்றான்.

முடிவு

பறவையோ இறந்தது

இந்த சம்பவம் எப்பொழுது நடந்ததென்பது மட்டும் எவருக்கும் தெரியாது. கோள் சொல்லியே இந்த விஷயம் ஊர் முழுதும் பரவக் காரணமானான்.

அரசன் மருமகன்மார்களைக் கூப்பிட்டு "நாம் ஏதோ கேள்விப் படுகிறோமே! அதன் விவரம் என்ன" என்று கேட்டார்.

"அரசே! பறவையின் கல்வி முடிந்து விட்டது" என மருமகனார்கள் பதில் அளித்தனர்.

"அது குதிக்கிறதா?" என்று கேட்டார் அரசர்.

"இல்லவே இல்லை" என்று விடை கூறினார் மருமகன்மார்கள்.

"அது பறக்கிறதா?"

"இல்லை"

"பறவையைக் கொண்டு வாருங்கள்" என்று அரசர் உத்தரவிட்டார்.

கொத்தவாலும், சிப்பாய்கள் பலரும் முன்னும் பின்னும் காவல் புரியப் பறவை அரசர் சமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அரசர் அதன் சரீரத்தை தன் விரலால் அமுக்கிப் பார்த்தார். அதன் வயிற்றில் அடைந்திருந்த ஓட்டுத் துண்டுகள் மட்டும் தான் 'கர கர' வென்றன.

பூஜைக்குகந்த
போட்டோபடங்கள்

இதுவரை வெளியாகாத அதனமாதிரி
பலரும் போற்றும் அற்புதப் படங்கள்
யாவும் சாஸ்திர முறைப்படியே
பூஜைக்கெனத் தயாரிக்கப்பட்டவை.

ஷண்முகக்கடவுள்	எசோதா கிருஷ்ணன்
வள்ளிலோலன்	குழந்தை கிருஷ்ணன்
பார்வதி குமாரன்	ராதா கிருஷ்ணன்
தண்டாயுதபாணி	
	அருணகிரிநாதர்
ஸரஸ்வதி	தியாகய்யர்வாள்
லக்ஷ்மி	அகஸ்தியர் பெருமான்
பாரதமாதா	பட்டிணத்தார்
	புத்தர்

படம் யாவும் அழகிய பார்டர் அட்டையுடன் கூடியவை
படம் 1க்கு விலை அணா 12. 6 படங்கள் ரூபா 4.
12 படகள் ரூபா 6. தபால் செலவு வேறு.

சர்மா சகோதரர், வேப்பேரி, சென்னை.

தேசாபிமானம் புகட்டும்

"நாஷனல் ஸாவனீர்" (காலண்டர் 1928)

வெகு அழகாய் உயர்ந்த கனத்த தக்த பாலீஷ் உள்ள (20"×15" அளவு) ஆர்ட் பேபரில் கீழ்கண்ட 27, ஆப்டோன் போட்டோ படங்கள் அடங்கியுள்ளது. இதில் முக்கியமாய் கவனிக்கத் தக்கது 'இந்தியமாதா' எங்களுக்கென்று நிபுணரொருவர், இப்பொழுது எழுதி தயாரித்துள்ளது அத்தாயுடன், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் தெய்வீக மனைவி சாரதா தேவி, விவேகாநந்தர் அமர்திருத்தலும், ஸ்ரீராமர், கிருஷ்ணன் தேவ தூதர்களைப்போல் காத்திருத்தலும், (7,×5½' அளவு) பார்க்க பரவசமுண்டாக்கும் பூஜிக்கத் தக்கது. மற்றும் இந்தியாவை நேசிக்கும் (2) C F ஆண்ட்ரூஸ் (3) B G ஹார்னிமன், அவர்களோடு வெவ்வேறு கொள்கைகளுள்ள இந்திய பிரமுகர்களில்;—

(4) மோதிலால் நேரு	(8) கனம் v. J. படேல்	(12) மகாத்மா காந்தி
(5) மாளவியா	(9) ரவீந்தர நாத் டாகூர்	(13) மௌலானா அலி சகோதரர்கள், தங்கள் தாயுடன்
(6) லஜ்பதிராய்	(10) ஸரோஜினி தேவி	(14) S. சீனிவாஸய்யங்கார்
(7) S. சத்தியமூர்த்தி	(11) அரவிந்த கோஷ்	(15) டாக்டர் அன்ஸாரி காங்கிரஸ் President, 1927

தாய் நாட்டிற்குழைத்த கீழ் கண்டவர்களின் தேகம் வியோகமடைந்தபோதிலும், அவர்களின் ஆன்ம சக்தி இந்தியாவை விட்டகலாது:—

(16) திலகர் (17) தாதாபாய் நௌரோஜி (18) C. R. தாஸ் (19) சிரத்தாநந்தர் (20) கோகலே (21) தயாநந்த ஸரஸ்வதி (22) S. கஸ்தூரி ரங்கய்யங்கார். ஜனங்களின் மூட இருளைப் போக்கடிக்க, பாப நிவாரணத்திற்கு பாடுபட்டு "அத்வைத" தத்துவத்தை பிரசாரம் செய்த அவதார புருஷர்களில்:—

(23) இயேசுநாதர் (24) புத்தர் (25) சங்கராச்சாரியார். "இந்தியஸ்திரீ" நாயகத்தின் பெருமையை காட்ட ('இந்தியமாதா'வுடனிருக்கும் 'சாரதாதேவி'யையும் காண்க) (26) சீதை (அசோகவனத்தில்) (27) மண்டோதரி.

தொங்கவிட இருபுரம் பிரேம் வைத்து (12) ஷீட்டுள்ள, 1928 வது, வருஷத்திய காலண்டர் பாட், சேர்த்துள்ளது. விலை அணு 12. (வி. பி. யில் 3 காபிகள் வரைக்கும் அணு 4. 6-க்கு அணு 6.)

குறிப்பு:—நாஷனல் சாவனீர் காலண்டர் "இந்தியன் நாஷனல் காலண்டர் இரண்டும் சேர்த்து ஆர்டர் செய்தால் "மகாத்மாஜி (காந்தி) சுற்றுப்பிரயாண ஞாபக போட்டோ படம்" (19"×12½, அளவில் ஆப்டோன் போட்டோ படங்களடங்கியது) இனமாய் அனுப்பப்படும். இந்தியா, பர்மா, ஸிலோன், தவிர வெளிநாட்டிற்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது. வெளியூர் ஆர்டர் மேற் கண்ட விலையுடன், காபி 1-க்கு அணு 4. வீதம் சேர்த்து (தபால் செலவுக்காக) 6, காபிகளுக்கு குறையாமல் முன் பணத்துடன் வரவேண்டும்.

எஸ். என். ராஜன் அண்டு கோ.

சீர்காழி, (தஞ்சாவூர் ஜில்லா.)

ஸ்ரீ சாரதா ரக்ஷை.

சகல சமயங்களும் ஒருருவாய் அமைந்ததும், அவதாரங்களில் இலகும்போல் விளங்கியதுமான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரது சரீர உருவம் ஜோதி ரூபமாய் பிரத்யக்ஷமாகப்பெற்ற பெரியவரொருவரிடமிருந்து கிடைக்கிற இவ் ரக்ஷையை கொடுத்து உதவுகின்றோம். அவதார மஹானது மனைவி பெண் கடவுளின் பெயரை இந்த ரக்ஷைக்கு இடப்பட்டிருக்கிறது. இவ்வரிய ரக்ஷை எவ்வருணத்தாரும் ஜாதி பேதமில்லாமல் அணியத்தக்கது. இதை அணிவோரை கெட்ட கிரஹங்களின் உபாதையினின்றும் காப்பாற்றி அவருக்கு தேக ஆரோக்கியமும், அஷ்ட ஐசுவரியமும், ஆண்டவனிடத்து பக்தியும் உண்டாக்குகிறது எவ்வித வியாதி, கஷ்டம் நிவர்த்தி, எண்ணியது யாவுமளிக்கும். ஆச்சரியமான பயன்கள் தருகின்ற இதன் குண வைபவங்களை விரித்துரைக்க இடம் பெருகும். ரக்ஷை 1-க்கு விலை ரூ. 3-4-0 (உள்நாட்டுக்கு) ரூ. 3-12-0 (வெளிநாட்டுக்கு) பார்சல் சார்ஜ் உள்பட வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

சோல் ஏஜண்டுகள்:—

எஸ். என். ராஜன், & கோ, (சீகாழி, தென் இந்தியா.)

குறிப்பு:—அணியும் விபரம் ரக்ஷையோடு தெரிவிக்கப்படும். ஆர்டர் கிடைத்ததும், ரக்ஷை தேவியின் திருபாதகமலங்களில் பூஜித்து வைக்கப்பட்டு 5-வது தினம்தான் அனுப்பப்படும். இதை அணிவோர், தம் வாழ்நாட்களில் அடையப்போகும் உன்னத பதவியின் அறிகுறியை, 2-வாரத்திற்குள் அதியாச்சரியமாகக் காணுவார்கள்

உலக விநோதம்.



ஜெர்மன் சர்கஸ் கம்பெனி யொன்றிலுள்ள மகா பலவான் குடை ராட்டினம் ஒன்றைத் தன் இரு கால்களிலும் தாங்கிக்கொண்டு, அதில் பெரிய ஆள்களாக எட்டு பேர்வழிகளை உட்கார வைத்து ராட்டினம் சுற்றுகிறார். இனிமேல் கட்டடத்தைத் தாங்கும் தூண்களாகச் சில பலவான்கள் கிளம்புவார்கள் போலும்.

மண்டலே யுக்குத் தெற்கே மிட்டிஞ்ச் நதிக்கரையில் ஷ்வேஸயன் என்ற ஊரில் ஸ்வர்ணமச்ச உற்சவம் ஒன்று பிரதி வருஷமும் கொண்டாடப் படுகிறது. இவ் வுற்சவத்திற்கு வெகு தூரத்திலிருந்து ஜனங்கள் திரளாக நதிக்கரையில் வந்து கூடுவார்கள். உற்சவ தினத்தன்று பொன்வர்ண முள்ள பிரும்மாண்டமான மீன்கள் கரையோரத்தில் பயமின்றி வருமாம். ஜனங்கள் அதற்குப் பூஜை செய்து ஆகாரம் போடுவார்களாம். அவை பயமின்றிக் கையினின்று ஆகாரத்தை வாங்கிச் சாப்பிடுபாடு. அதில் ஒரு விசேஷமும் ஆச்சரியமும் என்ன வென்றால், இந்த மீன்கள் உற்சவ தினத்தன்று மட்டும் தான் வெளியே வருகின்றன. மற்ற தினங்களில் அவைகளின் இருப்பிடம் எங்கென்றும் தெரிவதில்லை. வருஷத்தில் ஓர்நாள் இந்த தினத்தில் உற்சவ மென்று அதற்கு எப்படித் தான் தெரிகிறதோ? எந்த பாஷையில் பஞ்சாங்கம் வைத்துக்கொண்டு பார்க்கிறதோ



நிலக்கரிச் சுரங்கத்தில் உண்டாகும் கெட்டகாற்றினல் பெரும்உயிர்சேதம் நேருவதுண்டு. இந்தகாற்று உற்பத்தியாகக்கூடிய ஸ்தலம் எதுவென்று கண்டு பிடிப்பது கஷ்டம். ஆகவே அதற்குஇப்பொழுது புதியவழியொன்று கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது. படத்தில் காட்டியிருப்பது போல் ஒரு கூடு செய்யப் பட்டிருக்கிறது. அந்தக் கூட்டுக்குள் சிட்டுக் குருவிகளை அடைத்து விடுகிறது. நிலக்கரியினின்றும் கெட்டகாற்று உண்டாகக்கூடிய இடத்திலுள்ள சாதாரண காற்றே இக் குருவிகளை மயக்கமடையச் செய்து விடும். இக்குருவிகள் கூட்டு சுரங்கத்துக்குள் கொண்டு போகப் படுகின்றன. கெட்டகாற்று உண்டாகக் கூடிய இடங்களுக்கு வந்ததும் இவை இறக்கைகளைப் படபட வென் அடித்துக் கொண்டு மயங்கி விழுந்து விடும். இதனின்றும் அங்கு கெடுதல் இருக்கிறதென்று கண்டு கொண்டு சுரங்கத் தொழிலாளர்கள் அவ்விடத்தை வெட்டாமல் அப்புரம் சென்று விடுவார்கள். மயங்கி விழுந்த குருவிகள் மயக்கம் தெளிந்து எழுந்திருக்க கூட்டிற்கு மேலுள்ள குழாயில் நல்ல காற்று உற்பத்தி செய்யப் படுகிறது. கூட்டின் முன் பக்கத்தில் திறந்திருக்கும் கண்ணாடிக் கதவை மூடி விட்டு நல்ல காற்றை உள் செலுத்துவதால் குருவிகள் மயக்கம் தெளிந்து எழுந்து விடுகின்றன.

அமேரிக்காவிலுள்ள பிரதம சினிமா பட உற்பத்தி சாலையொன்றும் இந்த மனிதக் குரங்கு வளர்க்கப்படுகிறது. இது சினிமா பட உற்பத்திக்குண்டான பிரதம நடிகர்களில் ஒன்றாக விளங்குகிறது. இது சைக்கிள் விடுமாம், குதிரை சவாரி செய்யுமாம், மோட்டார் ஓட்டுமாம், ஆகாய விமானத்தையும் கூடச் செலுத்துமாம். நடிக்கும் பொழுது சந்தர்ப்பத்திற் கேற்றாப்போல் துக்கம், சந்தோஷம், சிரிப்பு, கோபம் முதலிய குறிகளை வெகு தெளிவாய் முகத்தில் காட்டுகிறதாம். இதற்குப் பிரதி மாதமும் ஏராளமான பணம் சம்பளமாகக் கொடுக்கப்பட்டு வருகிறதாம்.



இது புதுமாதிரியான ஜப்பான் காகிதம், இந்தக் காகிதத்தை எவ்வளவு வருஷங்கள் ஜலத்தில் ஊரப்போட்டாலும் இது ஊருவதில்லையாம். இதை ஸோப்போட்டு நன்றாகக் கசக்கிப் பிழிந்தாலும் கெடுவதில்லையாம்.

முட்டையில் முட்டைகள்

அனுராஜபுரத்தில் சென்ற மாதம் ஒரு ஸ்திரீ பலகாரஞ் சுடுவதற்காக முட்டை உடைத்ததில் அதில் ஒரு முட்டையினுள் உடைக்க உடைக்க ஒன்றினுள் ஒன்றாக ஆக ஐந்து முட்டைகள் ஒன்றினுமொன்று சிறியவைகளாக விருந்தனவாம். கலிகால விந்தையில் இதுவும் ஒரு விந்தை தான்.

இவர் ஓர் வங்காளவாலிபர். இவர் பெயர் ஸ்ரீ கோமஸ்வாமி. இவருக்கு வயது 17. சமீபத்தில் இவர் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையே யுள்ள பிரிட்டிஷ் சானல் என்ற சமுத்திரத்தை நீந்தித் தாண்டப் போகிறாராம்.

ஸ்ரீ பன்ஸரி முக்கர்ஜி
(வயது 19)

சமீபத்தில் நடந்த அகில இந்திய நடைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவர். இப் போட்டியில் முதல் பரிசு பெற்ற இந்தியர் இதுவரை இவர் ஒருவர்தான்.



நாம் போடும் சப்தங்களினால் காற்றில் சில அலைகள் ஏற்படுகின்றன. அவ்வலைகளை போட்டோ பிடிக்கும் காமிரா தற்பொழுது இங்கிலாந்திலும் பிரான்சிலும் உபயோகத்திலிருந்து வருகிறது.